

# தேற்றரவாளன்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# தேற்றரவாளன்

பரிசுத்தாவியானவரைப்பற்றி அறிதல்

எழுதியவர் :
ஆரோல்ட் பி. பார்க்கர்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
158, புரசைவாக்கம் பெரியசாலை,
சென்னை - 7

முதற் பதிப்பு : 1961

தமிழாக்கம் :

தியோடர் வில்லியம்ஸ், எம். ஏ.

PRINTED BY
BAPUJI PRESS
187, MOUNT ROAD, MADRAS-2

# முகவுரை

"என் பக்கத்தில் வேறு ஒருவர் நிற்கிறார் என்கிற சிந்தனையை நான் பெற்றதும் அந்த சிந்தனை என்னைப் பற்றிப் பிடித்ததுமான ஒரு மகிழ்ச்சியின் நாள் வந்தது. அந்த நாள் முதல் என் பயமும் கவலையும் என்னை விட்டு நீங்கிற்று" என்று பண்டிதர் R. A. டோரி எழுதுகிறார். பிற்காலத்தில் விசுவாச வீரராக விளங்கின அவருக்குப் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய அறிவு ஏற்பட்டபோது இதுதான் சம்பவித்தது.

இது வேத சத்தியத்துக்கு இசைந்தது என்றும், பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய ஆழ்ந்த சத்தியங்களை எளிதான முறையில் தெளிவாய் விளக்குகிறது என்றும் இந்தச் சிறு நூலை வாசித்தவர்கள் அறிவிக்கின்றனர். பண்டிதர் டோரி அவர்களும் மற்றும் பலரும் தங்கள் ஆத்துமிக ஜீவியத்தில் அடைந்த எழுச்சியையும் வல்லமையையும், இந்தச் சிறு நூலை ஊக்கத்தோடு வாசிக்கும் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும், தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தையும், கிரியையையும் தங்கள் ஜீவியத்தில் அனுபவிக்கவேண்டுமென்றும் இந்நூல் இவ்விதம் தொகுக்கப்பெற்றது.

இந்நூலை ஆங்கிலத்தில் இயற்றிய ஆரோல்ட் P. பார்க்கர், கதை சொல்வதில் திறமை வாய்ந்தவர். அவருடைய சொற் சித்திரங்களும், உள்ளங்கவரும் உதாரணங்களும் இச்சிறு நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் காண்பதினால் இதை வாசிப்பது இன்பமாயிருப்பதோடு, வாசிக்கும் விஷயங்கள் மனதில் பதிந்து விடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
| --- | --- |
| 1. [illegible] | — 1 |
| 2. [illegible] | — 11 |
| 3. [illegible] | — [illegible] |
| 4. பரிசுத்தாவியானவரின் [illegible] | — [illegible] |
| 5. பரிசுத்த ஆவியானவர் | — [illegible] |
| 6. ஆவியானவரின் [illegible] | — [illegible] |
| 7. ஆவியானவரின் [illegible] | — [illegible] |
| 8. [illegible] | — 77 |
| 9. பெரிய காரியங்கள் | — [illegible] |
| 10. [illegible] | — [illegible] |

## அத்தியாயம் 1

# தேற்றரவாளனின் வருகை

நம் ஆண்டவர் பரலோகத்துக்குத் திரும்புவதற்கு முன் தம் பூலோக வாழ்வின் இறுதியில், அவருக்குச் சொந்தமானவர்களில் வாசம்பண்ணும்படியாக வரப் போகும் வேறொரு தேற்றரவாளனைப்பற்றிக் கூறினார் (யோவான் 14: 16). பரிசுத்த ஆவியானவராகிய இந்தத் தேற்றரவாளன் பிதாவாகிய தேவனிடமிருந்து **கிறிஸ்து வின் நாமத்தில்** (யோவான் 14: 26), அதாவது, கிறிஸ்து வின் பிரதிநிதியாக அவருடைய ஊழியத்தைச் செய்யவும், அவருக்குப் பதிலாகக் கிரியை செய்யவும், அனுப்பப் படுவார் என்று கூறியிருக்கிறது. அது மட்டுமல்ல, அவர் தெய்வீக சர்வ சக்தி வாய்ந்தவராக தம்மைக் குறித்தோ, தாமே சொந்தமாகவோ ஒன்றும் கூறாமல், கிறிஸ்துவின் காரியங்களை அவருடைய நாமத்தைத் தரித் தவர்களுக்கு அறிவிப்பார் என்றும் சொல்லியிருக்கிறது (யோவான் 16: 14).

பரிசுத்த ஆவியானவர் தம்மைக் குறித்துச் சாட்சி கூறுவதற்கு வரவில்லை. கிருபையின் காலத்தில் தெய்வத் துவத்தின் தெய்வீக ஊழியராக அவர் வந்திருக்கிறார். கிறிஸ்துவிடமாக மனிதரை இழுப்பதே அவருடைய ஊழியம்.

### தெய்வத்துவத்தின் மூன்றாவது ஆள்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூலோகத்தில் இருந்தபொழுது "தேவன் நம்மோடிருக்கிறார்" என்றார்த்

தங்கொள்ளும் "இம்மானுவேல்" எனப்பட்டார், மத்தேயு 1: 23. தெய்வீகத் திரித்துவத்தின் இரண்டாவது ஆள் தேவனை மனிதர் காணும்படியாகச் செய்தார். அநேக ஆண்டுகளாக அவர் மனிதர் நடுவில் வாசம் பண்ணினர். அவர்கள் அவருடைய மகிமையைக் கண்டார்கள்.

இப்பொழுது நம்முடைய நாட்களிலும், பூலோகத்தில் திரியேகத் தெய்வத்துவத்தின் மூன்ருவது ஆள் தெய்வ மக்களின் உள்ளத்திலும், அவர்களோடும் வாசம் பண்ணுகிருர். கிறிஸ்துவுக்கென்று ஒரு சரீரம் ஆயத்தம் பண்ணப்பட்டது போல (எபி. 10: 5) ஆவியானவருக்கென்று ஆயத்தம் பண்ணப்படவில்லை. அவர் விசுவாசிகளின் சரீரத்தில் வாசம்பண்ணுகிருர்; அவரை வெளிப்படுத்தும் படியான ஆலயங்கள் நம்முடைய சரீரங்களே (I கொரி. 6: 19).

அவர் கிறிஸ்துவைப் போலவே ஆள் தத்துவமுடையவர் என்பதை நாம் தெளிவாக நம் மனத்தில் பதித்துக் கொள்ளவேண்டும். நாம் அவரைக் காணமுடியாது. ஆனாலும் அவருடைய பிரசன்னமும், ஆள் தத்துவமும் உண்மையான சத்தியங்கள். இதை வலியுறுத்துவதற்குக் காரணம் என்னவென்ருல், அநேகர் தேவனிடமிருந்து வெளிப்படும் ஒரு வகையான சக்தியே பரிசுத்த ஆவியானவர் என்று கருதுகிருர்கள். அதனுல் அவரை "அது" என்று குறிப்பிடுகிருர்கள். அவர் பெரிய சக்தியோடு கிரியை செய்கிருர் என்பது உண்மைதான். ஆனாலும் அவர் வெறும் சக்தியல்ல. அவர் ஆச்சரியமான வல்லமை படைத்தவராயிருப்பினும், வெறும் வல்லமையைக் காட்டிலும் மேலானவர்.

யோவான் 16: 13, 14-ல் இது தெளிவாகக் கூறப் படுகிறது. இந்த இரு வசனங்களிலும் அவரைக் குறித்து ஏழு காரியங்கள் குறிப்பிடப்படுகின்றன. பரிசுத்த ஆவி யானவரின் ஆள் தத்துவத்தை அவை சந்தேகமற நிரூபிக் கின்றன. அவையாவன:

1. அவர் வருகிறார்
2. அவர் நடத்துகிறார்
3. அவர் கேட்கிறார்
4. அவர் பேசுகிறார்
5. அவர் மகிமைப்படுத்துகிறார்
6. அவர் எடுக்கிறார்
7. அவர் அறிவிக்கிறார்.

இவற்றில் சில கிரியைகளை ஒரு வல்லமையோடு, அல்லது ஒரு சக்தியோடு சம்பந்தப்படுத்தலாம். ஆனால், எல்லாவற்றையும் அவ்விதம் செய்யமுடியாது. ஒரு வல் லமையால் கேட்கமுடியுமா? ஒரு சக்தியால் எடுக்க (பெற்றுக்கொள்ள) முடியுமா? நிச்சயமாக முடியாது. ஆகையால் இந்த ஏழு கிரியைகளையும் நடப்பிக்கிறவர் ஆள் தத்துவமுடையவர் என்பது தெளிவாகிறது.

இன்னொரு வேத வசனம் அவரைத் துக்கப்படுத்தக் கூடும் என்று நமக்கு அறிவிக்கிறது (எபேசியர் 4: 30). ஒரு வல்லமை அல்லது சக்தி துக்கப்படக்கூடுமா?

அன்றியும், யோவான் 16-லிருந்து மேற்கூறப்பட்ட இரு வசனங்களிலும் "அவர்" என்கிற பதம் எட்டு முறை உபயோகித்திருக்கிறதைக் கவனிக்கவும். ஒரு வல்லமையையோ அல்லது சக்தியையோ நாம் "அவர்" என்று அழைக்கமாட்டோம். ஆனால் பரிசுத்த ஆவியானவரையோ "அவர்" என்றழைக்கிறோம்.

### "தேற்றரவாளன் வரும்போது"

யோவான் 15: 26-ல் காணப்படும் மேற்கூறிய வார்த்தைகளிலிருந்து, அந்த வார்த்தைகள் கூறப்பட்ட காலத்தில், பரிசுத்த ஆவியானவர் வந்திருக்கவில்லை என்றறிகிறோம். யோவான் 16: 13-லும் "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது" என்கிற வார்த்தைகளில் இந்த கருத்து வெளியாகிறது. எதிர்காலத்தில் வந்திருக்கும் ஒரு ஆளைக் குறிக்க இந்த வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டனவென்றால், அப்போது அவர் இருந்திருக்கவில்லை. ஆகையால் எதிர்பார்க்கப்படும் ஒரு ஆளைக் குறிக்கவே அவை உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அப்படியானால், இயேசுவின் வருகைக்குமுன் இருந்த காலங்களில் உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையைக் குறித்து நாம் வாசிக்கிறோமே, அது எப்படி? ஆதியிலே ஜலத்தின்மேல் அவர் அசைவாடிக் கொண்டிருக்கவில்லையா? "உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்" என்று தாவீது ஜெபித்தபோது, அவரிடம் அவர் இருக்கவில்லையோ? மேலும், அப்போஸ்தலர் பேதுரு சொன்னபடி ஏவப்பட்ட தேவ மனுஷரிடம் அவர் இருக்கவில்லையோ? இவ்விஷயமான கேள்விகள் எழுகின்றன.

இவையெல்லாம் உண்மைதான். ஆனாலும் "தேற்றரவாளன் வரும்போது" என்று நம் ஆண்டவர் கூறிய பொழுது அவருடைய கருத்து வேறு. முற்றிலும் புதிதான ஒரு சம்பவத்தைக் குறித்தே அவர் இவ்விதம் பேசினார். சுவிசேஷங்களில் பரிசுத்த ஆவியானவரின் வருகை ஒரு எதிர்கால சம்பவமாகக் குறிக்கப்படுவது இந்த ஒரு இடத்தில் மட்டுமல்ல. யோவான் 14: 16-ல் ஆண்டவராகிய இயேசு தம் சீஷர்களிடம், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்.....வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் **தந்தருளுவார்**" என்று கூறினார். மறுபடியும் 26-ஆம் வசனத்தில் "பிதா **அனுப்பப்போகிற** பரிசுத்த ஆவி" என்று குறிப்பிடுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த வருகையில் **வாசம்பண்ணுகிறதற்காக** வருகிறார் என்பதனால் மட்டும் இந்த வருகை நூதனமானதாய்விடவில்லை.

பூர்வ காலங்களில் ஒரு குறிப்பிட்ட தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு தெய்வ ஊழியனை வல்லமைப்படுத்துவதற்காகவே அவருடைய வருகையிருந்தது. ஆதலால், அவர் யாரைச் சந்தித்தாரோ, அவர்கள் **மேல்** இறங்கினார் என்று நாம் பொதுவாக வேதத்தில் வாசிக்கிறோம். ஒத்னியேல், கிதியோன், யெப்தா, சிம்சோன், தாவீது, அசரியா, யாகாசியேல், சகரியா இன்னும் அநேகர்மேல் அவர் இறங்கினார்.

ஆனால் யோவான் 14: 17-ல் "அவர் **உங்களுக்குள்ளே** இருப்பார்" என்று கிறிஸ்து கூறினார். கொரிந்து

பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு, **"உங்களில்** தங்கி யிருக்கிற பரிசுத்த ஆவி" என்று பவுல் எழுதுகிறுர் (I கொரிந்தியர் 6: 19). மேலும், **"உங்களில்** வாசமா யிருக்கிற தம்முடைய ஆவி" (ரோமர் 8: 11) என்றும் **"நமக்குள்ளே** வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவி" (II தீமோத்தேயு 1: 14) என்றும் அவர் எழுதுகிறுர்.

பரிசுத்த ஆவியானவர் நம் **மேல்** இறங்குவதற்கும் **நமக்குள்** வாசம் பண்ணுவதற்கும் உள்ள வித்தியாசம் மிகவும் முக்கியமானது. அதை விளக்குவதற்கு எடுத்துக் காட்டாக, ஒரு பழங்காலத்திய பாய்மரக் கப்பலேயும், நவீன காலத்திய நீராவிக் கப்பலேயும் எடுத்துக் கொள் வோம். பாய்மரக் கப்பல் முன் செல்லுவதற்கு வெளியி லிருந்து **தன்மேல் வரும் ஒரு சக்தி**யைச் சார்ந்திருக் கிறது. காற்று அதன்மேல் வீசும்பொழுது, அது சுலப மாகவும், விரைவாகவும் முன்னேறுகிறது. ஆனுல் நீராவிக் கப்பலோ **தனக்குள்ளிருக்கும் ஒரு சக்தி**யினுல் ஓட்டப்படுகிறது. இந்தச் சக்தி விட்டுவிட்டு இயங் காமல், நிரந்தரமாகத் தொடர்ந்தியங்கும் சக்தியாகும். காற்றடித்தாலும், ஆழி பொங்கி, அலேகள் மலேபோல் உயர்ந்தெழுந்தாலும் நீராவிக் கப்பல் முன்னேறிக் கொண்டேயிருக்கும். ஏனென்ருல், அதை ஓட்டும் சக்தி அதற்குள்ளிருந்தே இயங்குகிறது.

கிறிஸ்து வருவதற்குமுன் தேவனுடைய மக்கள் பாய்மரக் கப்பலேப் போலிருந்தார்கள். இப்பொழுது அவர்களுடைய நிலேமை நீராவிக் கப்பலேப் போன்றது. நாம் முன்னேறிச் செல்வது நமக்குள்ளிருக்கும் சக்தி யைச் சார்ந்திருக்கிறது. நம் முன்னேற்றம் மட்டுமல்ல,

நம் சந்தோஷம், ஊழியம், சாட்சி எல்லாம் நமக்குள்ளே வாசம் பண்ணும் தேற்றரவாளனைச் சார்ந்தேயிருக்கின்றன. அவரும், அவருடைய கிரியையுமின்றி தேவனைப்பற்றிய மெய்யறிவும், தேவனுடைய பெரிய இரகசியங்களைப்பற்றிய விளக்கமும் நமக்குக் கிடைக்க முடியாது.

## பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய வாக்குத்தத்தமும் சத்தியமும்

மிகவும் முக்கியமான ஒப்பற்ற கிறிஸ்தவ சத்தியங்களில் ஒன்று, தெய்வத்துவத்தின் மூன்றாவது ஆளான பரிசுத்த ஆவியானவர் இந்தப் பூலோகத்தில் வாசம் பண்ணுகிறார் என்பதாகும்.

அவ்விதம் அவர் வந்து இங்கு வாசம்பண்ணுகிறதற்கு முன், இன்னொரு சம்பவம் நடக்கவேண்டியிருந்தது. இது யோவான் 7: 39-ல் "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். **இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தப்படியினால்** பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. புதிதும் ஆச்சரியமுமான விதத்தில் ஆவியானவர் அருளப்படுவதற்கு முன் புறக்கணிக்கப்பட்ட இயேசு உயர்த்தப்பட வேண்டும். ஆகையினாலே, யோவான் 16: 7-ல் "**நான் போகாதிருந்தால்** தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்று அவர் கூறியிருக்கிறார்.

இறுதியில் வாக்குத்தத்தம் நிறைவேறுங்காலம் வந்தது. நெடுநாட்களாக எதிர்பார்க்கப்பட்ட தேற்றர

வாளன் அனுப்பப்பட்டார். அவருடைய வருகையைக் குறித்த முழு விவரமும் அப்போஸ்தலர் 2-ல் கொடுக்கப் பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் வருகைக்கு முன்னால் அவருக்காக ஜெபிக்கவேண்டுமென்று நம் ஆண்டவர் தம் சிஷர்களுக்குப் போதித்திருந்தார், லூக்கா 11: 13. நூற் றிருபது பேரும் அவருடைய வருகைக்காகவே "ஒரு மனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந் தார்கள்" (அப். 1: 14) என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கடைசியில் ஜெபம் துதியாக மாறிற்று. பூலோகத் தாரால் தள்ளப்பட்ட இயேசு பரலோகத்தில் மகிமைப் பட்டார். "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு," பரிசுத்த ஆவியானவரைத் தம் மக் களில் நித்தம் வாசம் பண்ணும்படியாக அனுப்பினார்.

அந்தச் சம்பவத்திற்குப்பின் பரிசுத்த ஆவியான வருக்காக வேண்டிக் கொள்வதென்பதை நாம் வேதத் தில் காண்பதில்லை. அவருடைய வருகைக்குமுன் அத் தகைய விண்ணப்பம் அவசியமாயிருந்தது. ஆனால் அவர் அருளப்பட்டபின் அதற்கு அவசியமில்லை. தேற்றர வாளன் பூலோகத்தில் வாசம்பண்ணும் தற்காலத்தில் ஒரு கிறிஸ்தவன் அவருடைய வருகைக்கு முன்னிருந்த வர்கள் வேண்டிக்கொண்டதுபோல வேண்டிக்கொள் வானானால் அது அறியாமையும் அவிசுவாசமும்கொண்ட விண்ணப்பமாகும். உள்ளான மனுஷனில் நாம் ஆவி யினால் பலப்படவும், நம்மிலிருந்து ஜீவத் தண்ணீர் புறப் பட்டு மற்றவர்களுக்கு ஓடத்தக்கதாக அவர் நம்மை நிரப்பவும், சமாதானக் கட்டினாலே ஆவியின் ஒருமை

யைக் காத்துக்கொள்ளத்தக்கதாக தெய்வீக உதவிக்காக வும், நம்பிக்கையில் பெருகவும், பரிசுத்தாவியானவரைத் துக்கப்படுத்தாததப்படிக்கு அவர் நம்மைக் காக்கவும் ஜெபிக்கலாம். இவ்விதமான ஜெபத்தில் நாம் தரித்தி ருப்பது எவ்வளவு நல்லது.

### "**தந்தருளப்பட்டவர்**"

வாசகர்களே நான் ஒரு கேள்வி கேட்கிறேன். கிறிஸ்துவிலே உண்மையான **விசுவாசியாயிருக்கும்** ஒரு வன் தன்னுடைய எல்லாப் **பாவங்களும்** மன்னிக்கப் படவேண்டுமென்று ஜெபிப்பது **சரியா?**

நிச்சயமாகச் சரியல்ல, ஏனென்றால் தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை **மன்னித்திருக்கிறார்** என்று நாம் வாசிக்கிறோம் (எபேசியர் 4: 32) என்று நீங்கள் பதில் கூறுவீர்கள்.

மறுபடியும், நித்திய ஜீவனுக்காக அவன் ஜெபிப் பது சரியா என்று வினவினால், நிச்சயமாகச் சரியல்ல, ஏனென்றால் "குமாரனிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் நித்திய ஜீவனை **உடையவனாயிருக் கிறான்**". தன்னிடத்தில் ஏற்கனவே உள்ள தற்காக ஒருவன் ஜெபிப்பது மதியீனமான காரியமாகும் என்று நீங்கள் கூறுவீர்கள்.

பரலோகத்திற்குச் செல்லத் தகுதிக்காக நாம் வேண்டிக் கொள்வது அவசியமா என்று கேட்டால் அவ்விதமாகவே நீங்கள் பதில் கூறுவீர்கள். ஏனென்றால், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்க ளுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் **தகுதியுள்ளவர்களாக்கினவரும்**" (கொலோசெயர்

1: 12) என்று நாம் வாசிக்கிறோம். இவை எல்லாம் தெளிவாயிருக்கின்றன. இது போலவே, ஏற்கனவே நிறைவேறியதைக் குறிக்கும்படியான "தந்தருளின", அல்லது "கொடுத்திருக்கிற" என்கிற அருமையான பதம் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டதைக் குறிக்கும் சந்தர்ப்பத்தில் பன்முறை உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.

அப். 5: 32-ல் "தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் **தந்தருளின** பரிசுத்த ஆவி" என்று வாசிக்கிறோம். II கொரிந்தியர் 1: 22-ல் தேவன் "நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் **கொடுத்திருக்கிறார்**" என்று நமக்குக் கூறப்படுகிறது. மேலும், கலாத்தியர் 4:6-ல் "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால்.........தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் **அனுப்பினார்**" என்றும், I தெசலோனிக்கேயர் 4: 8-ல் "தமது பரிசுத்த ஆவியை நமக்குத் **தந்தருளின** தேவன்" என்றும், I யோவான் 3: 24-ல் "அவர் நமக்குத் **தந்தருளின ஆவி**" என்றும் வாசிக்கிறோம்.

இந்த வேதப் பகுதிகளிலிருந்து ஒரு கிறிஸ்தவ விசுவாசி பரிசுத்த ஆவியானவருக்காக வேண்டிக்கொள்வதற்குப் பதிலாக அவர் அருளப்பட்டதற்காக நன்றியோடு துதி செலுத்தவேண்டுமென்று அறிகிறோம்.

இதுவரை உண்மையான நன்றியறிதலோடு இந்தப் பெரிய ஈவுக்காக நீ உன் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தாதிருப்பாயானால், இன்றிலிருந்தே அப்படிச் செய்வாயா?

## அத்தியாயம் 2

# பரிசுத்த ஆவியாகிய முத்திரை

புதிய ஏற்பாட்டில் மும்முறை நாம் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுவதைக் குறித்து வாசிக்கிறோம். அதனால் பரிசுத்த ஆவியானவர் நம்மை முத்திரையிடுகிறார் என்று அர்த்தமல்ல. நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமென்று நம்மைக்குறிக்கும் முத்திரையாக அவரே இருக்கிறார். நம்மை முத்திரையிடுகிறவர் தேவனே (II கொரிந்தியர் 1: 22). நெற்றியிலே அடையாளமிடப்படுவதாலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட ஆடை அணிவதாலோ நாம் கிறிஸ்துவினுடையவர்கள் ஆகமாட்டோம்.

ஆவியினாலே பிறப்பதையும், ஆவியினாலே முத்திரையிடப்படுவதையும் நாம் ஒன்றுபடுத்தக்கூடாது. அவையிரண்டும் வெவ்வேறு சம்பவங்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியாக ஆவியினாலே பிறக்கிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாகக் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாயிருப்பதால் ஆவியினாலே முத்திரையிடப்படுகிறோம்.

குடியானவனொருவன் சந்தையிலே சில ஆடுகளை வாங்குகிறான். வாங்கின பிறகு, "இனிமேல் இந்த ஆடுகள் தப்பிப்போகுமானால் நான் அடையாளம் கண்டு பிடிக்கும்படியாக, என் பெயரைக் குறிக்கும் எழுத்தை அவைகள்மேல் முத்திரையாகப் போடுவேன்" என்று கூறுகிறான். ஆகையால் ஆடுகளின் விலையைக் கொடுத்து விட்ட பிறகு, உடனே அவைகளை முத்திரை

யிடத் தொடங்குகிறுன். முத்திரையினுலே அவை அவனு யவையாகி விடவில்லை. கிரயம் கொடுத்து வாங்கினதினு லேயே அவனுடையவையாயின. அவை அவனுக்குச் சொந்தமாகிவிட்டபடியால் அவற்றை அவன் முத்திரை யிடுகிறுன்.

இன்னுமிதைக் கவனிப்போம். நான் ஒரு துணிக் கடைக்குப் போய் சில சட்டைகள் வாங்குகிறேன், வாங்கி வீட்டுக்குக் கொண்டுவந்தவுடன் அடையாள மிடும் மையினுல் என் பெயரை அந்தச் சட்டைகளில் எழுதுகிறேன். நான் ஏன் அப்படிச் செய்கிறேன்? சட்டைகளை எனக்குச் சொந்தமாக்குவதற்கல்ல. நான் அவைகளுக்காகக் கொடுத்த கிரயத்தினுல் அவைகள் எனக்குச் சொந்தமாகிவிட்டன. ஆனுல், அவை எங்குக் காணப்பட்டாலும் என்னுடையவை என்று அறியப் படும்படியாக அவற்றை நான் முத்திரையிடுகிறேன்.

இதே மாதிரிதான், கிறிஸ்துவின் விலைமதியா இரத்தத்தினுல் கிரயத்துக்குக் கொள்ளப்படுவதனுல் விசுவாசி கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறுன். கிறிஸ்து வுக்குச் சொந்தமானதினுலே, தேவன் அவனிலே வாசம்பண்ணும்படியாகப் பரிசுத்த ஆவியானவரை அவ னுக்குக் கொடுத்து அவனை முத்திரையிடுகிறுர். இவ்வித மாக நாம் "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி யால் முத்திரை போடப்படுகிறேம்" (எபேசியர் 1: 13).

எந்தத் தகுதியினுலே நாம் முத்திரை போடப்படு கிறேம்? ஆண்டவராகிய இயேசு இவ்வுலகத்திலிருந்த பொழுது பிதாவாகிய தேவனுல் முத்திரை போடப்பட் டார், (யோவான் 6: 27). அவருடைய சொந்தப் பரி

பூரணத்தின் தகுதியினாலே இது சாத்தியமாயிற்று. ஆனால் நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவது நம்முடைய தகுதியினாலே அல்ல. நம்முடைய பரிசுத்தத்தினாலோ, முன்னேற்றத்தினாலோ, அல்லது பக்தி முதிர்ச்சியினாலோ நாம் முத்திரையிடப்படவில்லை. கிறிஸ்துவின் விலைமதியா இரத்தத்தினாலே மீட்கப்பட்டதனால் மட்டுமே நாம் முத்திரையிடப்படுகிறோம்.

## பாதுகாப்பின் முத்திரை

பரிசுத்த வேதத்தில், முத்திரையிடுவது அநேகமாகப் பாதுகாப்போடு சம்பந்தப்பட்டதாகவே காட்டப்பட்டிருக்கிறது. ஒரு பொருளை அதன் சொந்தக்காரருக்கென்று பாதுகாப்பதற்காகவே முத்திரையிடுவது வழக்கம்.

மொராக்கோ நாட்டின் சந்தையில் சாதாரணமாக ஒரு சம்பவத்தை நாம் பார்க்கலாம். ஒரு மனிதன் சிலப் பைகளில் தானியத்தை வாங்குவான். வாங்கினவுடனே அவற்றை முத்திரையிடுவான். தனக்குச் சொந்தமென்று காட்டும்படியாக அவற்றை முத்திரையிட்ட பிறகு, தன் கோவேறு கழுதையைக் கொண்டுவரும்படியாக அவன் சென்று விடுவான். பிறகு வந்து முத்திரையிட்டப் பைகளைப் பெற்றுக்கொண்டு கழுதையின்மேல் ஏற்றிச் செல்வான். இவ்விதமே, கிறிஸ்துவும் திரும்பி வந்து நம்மை எடுத்துச் செல்லும்வரை தேவன் நம்மை முத்திரையிட்டுச் சிறிது காலம் இவ்வுலகில் விட்டுவைத்திருக்கிறார்.

நம் ஆண்டவர் சிலுவையிலறையுண்டு அடக்கம் பண்ணப்பட்டபின் பிரதான ஆசாரியரும் பரிசேயரும்

ரோம தேசாதிபதியிடம் வந்து, "ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் **பத்திரப்படுத்தும்படி** கட்டளையிடவேண்டும்" என்று கூறினார்கள். அதற்கு அவன், "உங்களுக்குக் காவல் சேகவர் உண்டே; போய், உங்களால் **கூடிய மட்டும் பத்திரப்படுத்திக்** கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டான். பின்பு அவர்கள் என்ன செய்தார்களென்று கவனிப்போம். கல்லறையை வெகு பத்திரமாய்ப் பாதுகாப்பதற்காக "அவர்கள் போய்க் கல்லறைக்கு முத்திரை போட்டு, காவல்வைத்து கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்." (மத்தேயு 27: 66).

1. முத்திரையிட்டதினாலும், 2. காவல் வைத்ததினாலும் கல்லறையை அவர்கள் பாதுகாத்தார்கள். தேவனும் இதே மாதிரி நம்மைப் **பத்திரமாய்ப்** பாதுகாப்பதற்காக 1. பரிசுத்த ஆவியினால் முத்திரையிடுகிறார். 2. நமக்குக் காவலும் வைத்திருக்கிறார். "அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல், அவர்களை ராஜாக்களோடே கூட சிங்காசனத்தில் ஏறவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்" (யோபு 36: 7). இரவும் பகலும் அவர் நம்மைக் காக்கிறார்.

ஆசாரியராலும் பரிசேயராலும் கல்லறையைப் பாது காக்க முடிந்ததா? அவர்களைக் காட்டிலும் வல்லமை யுள்ள தேவன் கல்லறையின் முத்திரையை உடைத்துக் காவலாளிகளையும் கலங்கடித்துக் கல்லறையை வெறுமை யாக்கினார். ஆனால், தேவனே பரிசுத்த ஆவியால் முத் திரையிட்டிருக்கிறவர்களுக்கு இவ்விதம் ஒன்றும் சம்ப விக்காது. தேவனுடைய முத்திரையை உடைத்து அவ ருடைய பாதுகாப்பை மீற இந்த உலகில் எந்தச் சக்தி யாலும் முடியாது.

## எப்பொழுது ?

விசுவாசி எப்பொழுது பரிசுத்த ஆவியால் முத்திரை யிடப்படுகிறான்? அவன் குணப்படும் சமயத்திலா, அல் லது விசுவாச ஜீவியத்தின் வேறொரு கட்டத்திலா?

ரோமருக்கு எழுதின நிருபத்தைப் பார்ப்போம். 3-ஆம் 4-ஆம் அதிகாரங்கள் பாவிகள் நீதிமான்களாக்கப் படுவது எப்படியென்று விவரிக்கின்றன. 5-ஆம் அதி காரத்தின் ஆரம்பத்தில் நாம் தேவனால் நீதிமான்களாக்கப் பட்டு, தேவனிடத்தில் சமாதானத்தைப் பெற்றிருக் கிறோமென்று காண்கிறோம். இன்னும் அதே அதிகாரம் 5-வது வசனத்தில் அவருடைய அன்பு நம் இருதயங் களில் ஊற்றப்பட்டிருக்கிறது என்றிருக்கிறது. இது எப்படி? "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே." ஆகையால் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படும்பொழுதே பரிசுத்த ஆவியானவரும் நமக்கு அருளப் படுகிறார் என்று நாம் உறுதி கொள்ளலாம்.

ஆனால் எபேசியர் 1: 13-ல் "நீங்கள் விசுவாசி களானபொழுது ........ முத்திரையிடப்பட்டீர்கள்" என்

றிருப்பதனுல் விசுவாசிகளான பின் முத்திரையிடப்படு கிறோம் என்றர்த்தமல்ல. ஒரு சக்கரம் சுழலும்பொழுது அதன் ஆரைகள் ஒன்றையொன்று பின்பற்றுகின்றன. 1, 2, 3 என்று அவற்றை நாம் குறிப்பிடுவோமானுல், அவை ஒன்றையொன்று இதே ஒழுங்கில் பின்பற்று வதைக் கவனிக்கலாம். ஆனுல் அவையெல்லாம் ஒரே சமயத்தில் சுழல ஆரம்பிக்கின்றன. 1 சுழல ஆரம்பித்த பின் 2 சுழல ஆரம்பிப்பதில்லை. ஆனுலும் 1-ஐப் பின் பற்றியே 2 வருகிறது. விசுவாசியின் அனுபவத்திலும் இவ்விதமேதான். ஆரம் 1 விசுவாசித்தல், ஆரம் 2 நீதி மானுக்கப்படுதல், ஆரம் 3 பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் என்று வைத்துக்கொள்வோம். இச்சம்ப வங்கள் இந்த ஒழுங்கின்படியே கருதப்பட்டாலும், காலத்தைப் பொறுத்த அளவில் இவையெல்லாம் ஒரே சமயத்தில் நடந்தேறுகின்றன.

அப்போஸ்தலர் நடபடிகளில் குறிக்கப்படும் மாறு தலின் நாட்களில் இப்பொது விதிக்கு விலக்குகள் காணப் படுகின்றன. அவற்றை எட்டாம் அத்தியாயத்தில் விளக்குவோம். ஆனுல் அப்போஸ்தலர் 10-ல் விசுவாசி கள், குறிப்பாகப் புறஜாதியார், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றது எப்படியென்று காண்கிறோம். கொர்நேலியு வின் வீட்டில் பேதுரு போதித்துக் கொண்டிருந்த பொழுது "அவரை விசுவாசிக்கிறவன் எவனே அவன் அவருடைய நாமத்தினுலே பாவமன்னிப்பைப் பெறு வான்" என்று சொன்னுன், (வசனம் 43). அவனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் விசு வாசித்தார்கள். அந்தச் சந்தோஷச் செய்தியை அவர் கள் ஏற்றுக் கொண்டார்கள். பேதுரு பேசிக்கொண்

டிருந்தபொழுதே, "வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினர்". எந்தவித மான கால தாமதமோ, காத்திருத்தலோ, கைவைத்தலோ இங்கு இருந்ததாக நாம் காணவில்லை. செய்தியைக் கேட்டதும், விசுவாசித்ததும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதும் எல்லாம் ஒரே சமயத்தில் சம்பவித்தன.

## எதுவரைக்கும் ?

எதுவரைக்கும் நாம் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்பட்டிருக்கிறோம்? "அவரை நாம் துக்கப்படுத்தி அனுப்பிவிடும் வரைக்கும்" என்று சிலர் கூறுவார்கள். ஆனால் வேதம் என்ன கூறுகிறது? "நீங்கள் **மீட்கப்படும் நாள் வரைக்கும்** முத்திரையிடப்பட்டீர்கள்" (எபேசியர் 4: 30) என்று நாம் வாசிக்கிறோம்.

**ஆத்துமாவின்** மீட்பை இது குறிக்கவில்லை. கிறிஸ்துவிலுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆத்தும மீட்பு நடந்தேறிவிட்டது. ஆனால் இன்னும் நாம் காத்திருக்கும்படியான எதிர்காலத்திய மீட்பு ஒன்று உண்டு. "நாமுங்கூட நம்முடைய **சரீர மீட்பாகிய** புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருக்கிறோம்" (ரோமர் 8: 23).

நம்முடைய சரீரங்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமாயிருந்து, பரிசுத்த ஆவியானவர் அவைகளில் வாசமாயிருந்தாலும், அவை இன்னும் மீட்கப்படவில்லை. அவை இன்னும் அழிவுக்கும் சாவுக்கும் உரியவையே. ஆனால் ஒரு நாள் வரப்போகிறது. அன்று, ஆதாமின் எல்லாச் சாயலிலிருந்தும் அவை மீட்கப்பட்டு கிறிஸ்துவின் சொந்த

மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மாற்றப்படும். இந்த மீட்பிற்காகத்தான் நாம் இன்னும் காத்திருக்கிறோம். அது சமீபித்துக் கொண்டேயிருக்கிறது.

நாம் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும் பொழுது அவர் நம்மை விட்டுவிடமாட்டார். ஆனால் நமக்கு அவர் மூலமாக வரும் சந்தோஷத்தையும், ஆறுதலையும் கொடுக்கமாட்டார். ஆகையால் அவரைத் துக்கப் படுத்துகிறது எவ்வளவு பயங்கரமானது!

ஒருவன் விசுவாசிக்கும்பொழுது "மீட்கப்படும் நாளுக்கென்று" பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படு கிறான். இதைப்பற்றி இன்னொரு அத்தியாயத்தில் விரி வாகக் கவனிப்போம். இனி பெந்தெகொஸ்தே நாளன்று என்ன சம்பவித்ததென்று கவனிப்போம்.

## அத்தியாயம் 3

## பெந்தெகொஸ்தேயின் வல்லமை

பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்ட சம்பவம் மூன்று காரணங்களினாலே விசேஷித்ததாகும். முதலாவது, பெந்தெகொஸ்தே பூமியிலே ஒரு **புதிய ஆரம்பத்தைக்** குறிக்கிறது. அதுதான் கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆரம்பம், திருச்சபையின் பிறந்த நாள்.

தேவனுடைய திட்டத்தின்படி அவர் ஏற்படுத்தியிருந்த அந்தப் புதிய சகாப்தத்தை ஆரம்பிப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவரே இவ்வுலகத்திற்கு வந்தார். இந்த ஆரம்பம் இன்னுமொருமுறை நடைபெறவேண்டிய அவசியமில்லை. ஆகையால், இரண்டாவது பெந்தெகொஸ்தே என்பதொன்று கிடையாது. ஆலயஆராதனை ஆரம்பிப்பதைக் குறிக்க மணி அடிக்கிறது. ஆராதனை ஆரம்பித்தபின், தொடர்ந்து மணி அடிக்குமா? இவ்விதமே பெந்தெகொஸ்தேயின் உண்மையான முக்கியத்துவத்தை அறிந்தவர்கள் அது மறுபடியும் சம்பவிக்குமென்று எதிர்பார்க்கமாட்டார்கள்.

### ஐக்கியமும் வல்லமையும்

பழைய ஏற்பாட்டின் நாட்களில் கர்த்தருக்குப் பயந்தவர்கள் சில வேளைகளில் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிப் பேசிக் கொள்வார்கள். ஆனால் அவர்களுக்குள்ளே நெருங்கிய சம்பந்தமிருந்ததில்லை. பழக்

கூடையில் நெருக்கி அடைக்கப்பட்டும், ஒன்ருே டொன்று கலவாத ஆப்பிள் பழங்களைப்போல அவர்க ளிருந்தார்கள். பழக் கூடையைக் கவிழ்த்தவுடன் பழங் கள் வெவ்வேறு திசையில் உருண்டோடுகின்றன. அவை களை ஒன்றுபடுத்துவதொன்றுமில்லை.

ஆனுல் கிறிஸ்தவ விசுவாசிகளின் ஐக்கியத்தைக் காட்ட மனித சரீரத்தை ஒரு எடுத்துக் காட்டாக உப யோகிக்கலாம். நாமெல்லாரும் ஒரே சரீரத்தின் அவய வங்களாயிருக்கிருேம். ஒரு மனிதன் தெருவிலே விழு வானுனல், அவன் கைவிரல்களும், கால்களும், கண் களும்,காதுகளும் பழக்கூடையிலிருந்து பழங்கள் உருண் டோடுவதைப்போல உருண்டோடமாட்டா. ஒரே அமைப்பின் அங்கங்களாயிருப்பதனுல், அவை ஒன்ருே டொன்று ஐக்கியப்பட்டிருக்கின்றன.

கிறிஸ்தவர்களாகிய நாமும் அவ்விதமேயிருக் கிருேம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தவர் களைப்போல நாம் இல்லை. **அவர்கள்** நாம் கவனித்த பழக் கூடையின் பழங்களைப்போல வாழ்ந்தார்கள். **நாமோ** ஒரு ஜீவனுள்ள சரீரத்தின் அவயவங்களாயிருக் கிருேம். பெந்தெகொஸ்தே அன்று பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்ட சமயத்தில் அச்சரீரம் உருவாக்கப்பட்டது. ஒரே ஆவி நம்மில் வாசமாயிருக்கிறபடியால், நாம் ஒரே சரீரமாயிருக்கிருேம்.

இது ஒரு சங்கமல்ல, ஒரு சரீரம்! ஏதாவதொரு சங்கத்தைக் கவனிப்போமானுல் அதற்கு ஒரு தலைவர், உபதலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், இன்னும் அதைக்

கண்காணிப்பதற்கு ஒரு குழு, எல்லாரும் இருக்கவேண்டும். ஆனால் ஒரு சரீரம் அவ்விதம் அமைக்கப்படுவதில்லை. மனித சரீரத்தை இயக்குவதற்கு ஒரு தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார் அல்லது கண்காணிக்கும் குழு அவசியமில்லை. அதை ஆளுவது ஒரே ஒரு தலைதான்.

கிறிஸ்துவின் சரீரமும் அங்ஙனமே அதன் தலையாகிய கிறிஸ்துவினால்தானே நடத்தப்படுகிறது, ஆளப்படுகிறது. தலையின் இலட்சணங்கள் உருவாக்கப்படும்படியாகவே அச்சரீரத்தின் அவயவங்களும் இவ்வுலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமாக பெந்தெகொஸ்தே நாளன்று உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ ஐக்கியம் நம் வாழ்க்கையிலே காணப்படுவதாக. எந்தக் கிறிஸ்தவ விசுவாசியையும் நாம் சந்திக்கும்போது, ஒரு வேளை பஸ்ஸிலும் புகை வண்டியிலும் நாம் பிரயாணம் பண்ணும்போது சந்தித்தாலும், அவரைக் கிறிஸ்துவின் சரீரத்தில் நம்முடைய உடன் அவயவமாகவும், கிறிஸ்துவிலே நம்முடன் ஐக்கியப்பட்டவராகவும் கருதவேண்டும். இவ்விதமாக "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபேசியர் 4: 3).

பெந்தெகொஸ்தேயின் மூன்றாவது விசேஷித்த அம்சமாவது ஆண்டவருடைய அடியார்களை நிரப்பிய ஒரு புதிய அற்புத **வல்லமையாகும்.** "பரிசுத்த ஆவியானவர் உங்கள்மேல் வரும்பொழுது நீங்கள் பெலனடைவீர்கள்" என்று உயிர்த்தெழுந்த கிறிஸ்து கூறி

ஞர் (அப். 1: 8). மேலும் "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றும் அவர்களுக்குக் கட்டளையிட்டார், (லூக்கா 24: 49). அவர்களுடைய சாட்சியின் வல்லமை **பட்டயத்துக் குரியதல்ல.** முகம்மதுவும் அவனைப் பின்பற்றினவர்களும் பயமுறுத்தி மற்றவர்களைத் தங்கள் மதத்தில் சேர்த்தார்கள். இன்னும் இந்த வல்லமை **அற்புதங்களுக் கடுத்ததுமல்ல.** தேவனுடைய புதிய ஆரம்பத்தை ஊர் ஜிதப்படுத்துவதற்கும், அப்போஸ்தலர்கள்கூறிய செய்தி தேவனுடைய செய்தியென்று நிரூபிப்பதற்கும் அற்புதங்கள் பயன்பட்டன. ஆனால் வருங்காலத்தில் மக்களை விசுவாசத்திற்கு நடத்தும் வல்லமை அற்புதங்களுக்குமட்டுமுரியதல்ல.

## நான்கு சமுதாயங்கள்

பரிசுத்த ஆவியின் வருகையைக் குறித்து நாம் ஆராயும்பொழுது கவனிக்கவேண்டிய நான்கு சமுதாயங்களாவன: 1. யூதக் கிறிஸ்தவர்கள், 2. சமாரியக் கிறிஸ்தவர்கள், 3. புறஜாதிக் கிறிஸ்தவர்கள், 4. யோவான் ஸ்நானகனின் சீஷர்கள். இந்நான்கு சமுதாயங்களைச் சேர்ந்தவர்களும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டுக் கிறிஸ்துவின் ஒரே சரீரமானார்கள். அச்சரீரத்தில் யூதனென்றும் புறஜாதியானென்றும் வேறுபாடில்லை.

யூத விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்

கள். அவ்விதமாகவே சமாரிய விசுவாசிகளின் அனுபவம் அப். 8: 14-17லும், புறஜாதியாரான விசுவாசிகளின் அனுபவம் அப். 10: 44-46லும், யோவான் ஸ்நானகனுடைய சீஷர்களின் அனுபவம் அப். 19: 6-லும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த ஞானஸ்நானம் மறுபடியும் யாருக்கும் அருளப்படவில்லை. மேற்கூறிய நான்கு சமுதாயங்களிலும் யார் யார் கிறிஸ்துவை விசுவாசித்தார்களோ, அவர்களைக் கிறிஸ்தவ சபையில் சேர்க்கும் ஒரு அனுபவமாகவே அது இருந்தது. அதற்குப் பின்னர் விசுவாசிகளானவர்கள் இவ்விதமான ஞானஸ்நானத்தைப் பெறவில்லை. அவர்கள் குணப்பட்ட சமயத்திலேயே பரிசுத்த ஆவியானவரைத் தங்களில் வாசம் பண்ணும்படியாகப் பெற்றுக்கொண்டார்கள். இவ்விதமாக அவர்களும் அந்த ஒரே சரீரத்தில் சேர்க்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் சம்பவித்த ஆவியானவரின் ஞானஸ்நானம் மறுபடியும் சம்பவிக்கவில்லை.

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும், கிரியையும் குறிப்பதற்காக ஏழுமுக்கியமான பதங்கள் உபயோகிக்கப்படுகின்றன :

1. பிறப்பது (யோவான் 3: 5, 6).

2. வாசம்பண்ணுவது (II தீமோத்தேயு 1: 14, ரோமர் 8: 11).

3. முத்திரையிடுவது (II கொரிந்தியர் 1: 22, எபேசியர் 1: 13, 4: 30).

4. அச்சாரம் (II கொரிந்தியர் 1: 22, எபேசியர் 1: 14).

5. அபிஷேகம் செய்வது (II கொரிந்தியர் 1: 21, I யோவான் 2: 27).

6. நிரப்புவது (லூக்கா 1: 15, 41, 67; அப். 4: 8, 4: 17 முதலியவை; எபேசியர் 5: 18).

7. ஞானஸ்நானம் பண்ணுவது (மத். 3: 11, அப்போஸ்தலர் 1: 4, I கொரி. 12: 13).

இந்தப் பதங்கள் ஒன்றுக்கொன்று மாற்றப்படக்கூடியவையல்ல. அவை வெவ்வேறு அர்த்தமுள்ளவை. ஒவ்வொன்றுக்கும் தனி முக்கியத்துவமுண்டு. பரிசுத்த வேதத்தின் வார்த்தைகளைக் குறித்து சங்கீதம் 12: 6-ல் "மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது" என்று கூறியிருக்கிறது. அந்த வார்த்தைகளின் உபயோகத்தில்தானே ஒரு நோக்கமிருக்கிறது. நாம் எப்பொழுதும் மனித அனுபவங்களைச் சாராமல், தேவ வசனத்தைச் சார்ந்திருக்கவேண்டும்.

## அத்தியாயம் 4

# பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிக்கும் வேத வசனங்களை நாம் வெகு கவனமாக ஆராய்வோம். முதலாவதாக, இந்தச் சம்பவத்தை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசன வசனங்களைக் கவனிப்போம்.

மத்தேயு 3: 11-ல் யோவான் ஸ்நானகன் "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று கூறுகிறான். அவனுடைய இந்த வார்த்தைகளை மாற்கு 1: 8-லும், லூக்கா 3: 16-லும் கூடக் காணலாம். யோவான் 1: 33-ல் ஆண்டவராகிய இயேசு தாமே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பாரென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களில் இன்னொன்று அப்போஸ்தலர் 1: 4. இங்கே தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் நம் ஆண்டவர் தாமே நிறைவேறப்போகிற வாக்குத்தத்தத்தைக் குறித்துப் பேசுகிறார். "சில நாளுக்குள்ளே" என்று அந்த ஞானஸ்நானத்தின் காலத்தையும் குறிப்பிடுகிறார்.

இந்த வசனங்கள் கூறப்பட்ட மூன்றரை வருடக் காலமும் வாக்குத்தத்தம் நிறைவேறாமலேயிருந்தது. ஆவி

யானவரின் ஞானஸ்நானம் அருளப்படவில்லை. ஆனாலும், இந்தக் கால அளவில் கிறிஸ்துவின் சீஷர்கள் அநேக காரியங்களைச் சாதித்தார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். சென்ற இடங்களிலெல்லாம் நோயாளிகளையும் குணமாக்கினார்கள் (லூக்கா 9: 6), பிசாசுகளைத் துரத்தினார்கள் (மாற்கு 6: 13). அவைகள் கட்டுப்படுவதையும் கண்டார்கள் (லூக்கா 10: 17). ஆவியானவரின் ஞானஸ்நானமில்லாமலே இவைகளையெல்லாம் செய்தார்கள். ஒரு முறை அவர்கள் தோல்வியடைந்தார்கள். தோல்விக்குக் காரணமென்னவென்று ஆண்டவரிடம் கேட்டபொழுது, ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறவேண்டுமென்று அவர் கூறவில்லை. ஆனால் அவர்கள் விரட்டத் தவறிய அந்தக் குறிப்பிட்ட வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே விரட்டப்படும் என்று கூறினார்.

ஆகையினாலே ஆண்டவர் இவ்வுலகத்திலிருந்த காலத்தில், அற்புதங்களைச் செய்யவோ அல்லது வல்லமையாகச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவோ ஆவியானவரின் ஞானஸ்நானம் அத்தியாவசியமாயிருக்கவில்லை. அவர் பரமேறின பிறகுதான் அந்த ஞானஸ்நானம் அருளப்பட்டது.

### ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறித்த போதனையை வெளிப்படுத்தும் ஒரு வேதப் பகுதி I கொரிந்தியர் 12:13. "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்

லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்''. இந்த வசனத்தில் "ஞானஸ்நானம் **பண்ணப்பட்டோம்**'' என்றிருக்கிறது. ஆகவே ஆவியானவரின் ஞானஸ்நானம் நடந்தேறிய ஒரு சரித்திர சம்பவமாக இங்கு குறிக்கப்படுகிறது.

இந்த வசனத்தில் மூன்று காரியங்களை நாம் குறிப்பாகக் கவனிப்போம்: 1. **கொரிந்திய** விசுவாசிகளில் **எத்தனை பேர்** பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தார்கள்? "**எல்லாரும்**'' என்று திட்டவட்டமாகக் கூறப்படுகிறது.

இந்த விசுவாசிகளில் சிலர் சண்டையிடுகிறவர்களாகவும், பிரிவினை மனப்பான்மையுள்ளவர்களாகவும் இருந்தார்கள் (I கொரி. 1: 11, 12). இன்னும் மாம்சத்துக்குரியவர்களாகவும், மனுஷ மார்க்கமாய் நடக்கிறவர்களாகவுமிருந்தார்கள் (I கொரி. 3: 3). சிலர் தங்கள் சகோதரருக்கு விரோதமாக அவிசுவாசிகளுக்கு முன் வழக்காடுகிறவர்களாக இருந்தார்கள் (I கொரி. 6: 6). இன்னும் சிலர் கர்த்தருடைய பந்தியைப் புசிக்கிறதற்கும், குடிக்கிறதற்கும் உரிய இடமாக மாற்றியிருந்தார்கள் (I கொரி. 11: 21, 22). எந்த விதத்திலும் அவர்கள் நல்ல மாதிரிகளாக இருக்கவில்லை. மறுபடியும், மறுபடியும் பவுல் அப்போஸ்தலன் அவர்களுடைய மாம்சப் பிரகாரமான ஜீவியத்திற்காக அவர்களைக்கடிந்துகொள்கிறான். ஆனாலும் அவர்கள் உண்மையாகக் கிறிஸ்துவை விசுவாசித்ததினாலே (அப். 18: 8) கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்

பட்ட தேவனுடைய பிள்ளைகளாயிருந்தார்கள் (I கொரி. 6: 11). ஆகையினாலே அவர்கள் **எல்லாருமே** ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தார்கள்.

2. **எதற்காக** கொரிந்திய விசுவாசிகள் ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தார்கள்? சாட்சியிலும் ஊழியத்திலும் அவர்களை வல்லமைப்படுத்துவதற்காக மட்டுமல்ல, அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுவதற்கும் அல்லது ஒரு உன்னதமான அனுபவத்தைப் பெறுவதற்குமல்ல. அவர்கள் ஒரு சரீரமாக ஐக்கியப்படவேண்டுமென்பதே ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் பெரியநோக்கம். அந்த ஞானஸ்நானத்தினால் விசுவாசிகளின் கூட்டம் சில பொதுவான கருத்துக்களைக் கொண்ட பல பேர் சேர்ந்ததொரு கூட்டமாக மட்டுமிராமல், உண்மையாகவே ஒரே சரீரமாக உருவாக்கப்பட்டது.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை விளக்கும் எடுத்துக்காட்டாக Iகொரிந்தியர் 12-லும், மற்ற பகுதிகளிலும் மனிதசரீரம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மனித சரீரமானது ஒரு கூட்டமைப்பல்ல, அது ஒவ்வொரு பகுதியிலும் ஒரேவிதமான ஜீவனுடையதாய், தலையினாலே ஆளப்படுகிற ஒரு அமைப்பாகும். இதைக்குறித்து முந்தின ஒரு அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

3. **எப்பொழுது** கொரிந்து சபை விசுவாசிகள் இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்? அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தின் ஒரு கட்டத்திலே அல்ல. இதை நாம் சற்றுக் கூர்ந்து கவனிப்போம்.

I கொரிந்தியர் 10: 1, 2 வாசிப்போமாக. "நம்முடைய பிதாக்கள் **எல்லாரும்** மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், **எல்லாரும்** சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். **எல்லாரும்** மோசேக்குள்ளாக மேகத்திலும் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள்." இந்தப் பிதாக்களில் சிலரைக் குறித்து அப். 28: 27-ல் நாம் வாசிக்கிறோம். சிவந்த சமுத்திரம் கடக்கப்பட்ட சம்பவத்திற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் ஜீவித்தார்கள். ஆயினும், "நம்முடைய பிதாக்கள் **எல்லாரும்** மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், **எல்லாரும்** சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது.

மேலும் ஆமோஸ் 2: 10–ல் தவறிப்போன தம் மக்களைப் பார்த்து, "நீங்கள் எமோரியனுடைய தேசத்தைக் கட்டிக் கொள்ளும்படிக்கு **உங்களை** நான் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, **உங்களை** நாற்பது வருஷமாக வனாந்தரத்திலே வழி நடத்தினேன்" என்று யெகோவா சொல்லுகிறார். இங்குக் கூறப்படும் மக்கள் உண்மையாகவே எகிப்திலோ அல்லது வனாந்தரத்திலோ இருந்ததேயில்லை. எகிப்தைவிட்டு வெளியேறி அநேக நூற்றாண்டுகள் கழிந்தப்பின் அவர்கள் ஜீவித்தார்கள். இருப்பினும், அந்த அற்புதமான அனுபவத்தில் பங்கு பெற்றவர்களாகக் கூறப்படுகிறார்கள்.

இவ்விதமாகவே, இந்தக் கொரிந்திய விசுவாசிகளும், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அருளப்பட்ட அந்தச் சமயத்தில் இருக்கவில்லை. ஏசாயாவின் நாட்களிலுள்ள "பிதாக்களும்", ஆமோஸின் நாட்களிலுள்ள

இஸ்ரவேலரும், எகிப்திலிருந்து இஸ்ரவேலர் வெளியேறிய அந்த நாட்களில் ஜீவித்திராவிட்டாலும், தங்கள் வம்சத் தொடர்பினாலே அந்த அனுபவங்களில் பங்கு பெற்றவர்களாகக் கருதப்பட்டார்கள். அவ்விதமே கொரிந்திய விசுவாசிகளும் கிறிஸ்துவின் சரீரத்தில் பங்குள்ளவர்களாக இருப்பதால், அந்தத் தொடர்பினால் ஆவியானவரின் ஞானஸ்நானத்தில் பங்கு பெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் விசுவாசித்து தேவ ஆவியானவரால் முத்திரையிடப்பட்டதினால், ஆவியானவரின் ஞானஸ்நானத்தினால் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தில் பங்குள்ளவர்களானார்கள்.

### சம்பவம்

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிக்கும் மூன்றாவது வகை வேதப் பகுதிகள் அந்தச் சம்பவத்தையே நேரடியாகக் குறிக்கும்.

"சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்பெறுவீர்கள்" (அப். 1 : 4) என்று நம் ஆண்டவர் அருளிய வாக்குத்தத்தம் நிறைவேறியதை விரிவாகக் குறிக்கும் அதிகாரம் அப்போஸ்தலர் 2 ஆகும். இந்த அதிகாரத்தில் "ஞானஸ்நானம்" என்ற பதம் இந்தச் சம்பவத்தைக் குறிக்க உபயோகிக்கப்படாவிட்டாலும், இதுதான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஞானஸ்நானம் என்பது அப். 1: 5; 11: 15, 16 முதலிய வசனங்களிலிருந்து தெளிவாகிறது. ஆவியானவரைப் **பொழிந்தருளினார்** என்று அப். 2: 33-ல் கூறப்பட்டிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளிலே எவ்விதம் ஆவியானவர்

அருளப்பட்டாரோ அவ்விதமே இன்னுமொரு முறையும் ஊற்றப்பட்டார் (அப். 10: 44). "ஆதியில் நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" (அப். 11: 15).

மறுபடியும் I கொரிந்தியர் 12-ல் **"எல்லாரும்"** என்கிற வார்த்தையைப் பார்க்கிறோம். நூற்றிருபது சிஷர்களும், ஆண்களும், பெண்களும் **எல்லோரும்** ஒரு மனத்துடன் ஒரே இடத்தில் இருந்தார்கள். அச்சமயம், திடீரென்று ஆவியானவர் "ஊற்றப்பட்டு" **எல்லோரை**யும் நிறைத்தார் (அப். 2: 4). எல்லோரும் இந்த ஞான ஸ்நானத்தில் பங்குபெற்றார்கள். அதன் பலனைக் கிறிஸ்துவின் சரீரம் உருவாக்கப்பட்டது. நூற்றிருபது பேரும் அந்தச் சரீரத்தின் அவயவங்களாகப் பரலோகத்திலிருக்கிற தங்கள் தலையாகிய கிறிஸ்துவோடு ஐக்கியமானார்கள்.

வேறு பல விளைவுகளும் காணப்பட்டன. பலத்த காற்றின் **சத்தம்** கேட்டது. அக்கினிமயமான பிளவுண்ட நாவுகள் ஒவ்வொரு சிஷன் மேலும் அமர்ந்தன. இதற்கு முன்னான காலங்களில், தேவன் தம் தூதரைக் காற்றுகளாகவும் அக்கினி சுவாலைகளாகவும் உண்டாக்கியிருந்தார் (எபி. 1: 7). மனிதருடைய ஆத்துமாக்களில் அனுக்கிரகத்தின் காற்றுவீசவோ, அல்லது வைராக்கியத்தின் அக்கினி பற்றியெரியவோ வேண்டியதிருந்தால், அவர் தம் தூதரை உபயோகித்தார். ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகையினால் இது மாறிற்று. ஆவியானவரே அந்த ஊழியத்தை

ஏற்றுக்கொண்டார். சீஷர்கள் ஆவியானவராலே ஞான ஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியாலே நிரப்பப் பட்டார்கள். அதற்குப் பின் விசுவாசிகள் ஆவியானவ ராலே தோடர்ந்து நிரப்பப்படும்போது பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள்பெற்ற ஞானஸ்நானத்தோடு தாங்கள் பெற்ற ஆவியின் நிரப்புதலேத் தப்பானபடி கலந்து விடு கிருர்கள். எபேசியர் 5: 18-ல் ஆவியாலே ஞானஸ்நானம் பெறுங்கள் என்று சொல்லாமல் ஆவியிஞலே நிறைந் திருங்கள் என்றே போதிக்கப்படுகிறோம். இந்த வித்தி யாசம் மிகவும் முக்கியமானது.

## அத்தியாயம் 5

# பரிசுத்த ஆவியானவர்

வரப்போகிற தேற்றரவாளன் தம்முடைய சீஷர்களுடன் எப்பொழுதும் தங்கியிருப்பார் என்ற நம் ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய வருகையினாலே பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பித்து வைக்கப்பட்டவை இன்னும் நிலைத்திருக்கின்றன. பரிசுத்த ஆவியானவரின் காலத்திலேதான் நாம் இன்னும் ஜீவிக்கிறோம்.

இதை அநேகர் மறந்து மறுபடியும், மறுபடியும் வரவேண்டுமென்று அவரை அழைக்கிறார்கள்.

ஒரு பொதுக் கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்கும்படியாகக் கனவான் ஒருவர் ஒப்புக்கொண்டு, தக்க சமயத்தில் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். ஆனால் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் அவர் வந்ததையறியாமல் விசாரப்படத் தொடங்கினார்கள். அவருடைய வீட்டிற்கு டெலிபோன் மூலம் அழைப்பனுப்பி அவர் வரும்படிக் கெஞ்சினார்கள். ஆனால் அவர் அரை மணி நேரத்திற்கு முன்னரே கூட்டத்திற்குப் புறப்பட்டு விட்டாரென்று செய்தி வந்தது. இவையெல்லாம் ஒரு பக்கத்தில் நடக்கும்பொழுது, அக்கிராசனம் வகிப்பதற்கு ஆயத்தமாக வந்திருந்த அந்தக் கனவான் மற்றவர்கள் தம்மைக் கண்டு வரவேற்கமாட்டார்களாவென்று அந்த இடத்திலேயே காத்திருந்தார். அங்கிருந்த இரண்

சொரூபமாகிவிட்ட அவர் பேசினார். ஆனால் ஒருவரும் அவரைக் காணவில்லை, எல்லோரும் அங்குமிங்கும் அவரைத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

இந்த மாதிரிதான் பரிசுத்த ஆவியானவரிடத்திலும் அநேக கிறிஸ்தவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி பெந்தெகொஸ்தே நாளில் அவர் வந்துவிட்டார். தம்முடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டவராய், கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக அவர் இங்கேயே இருக்கிறார். ஆகையால், அவர் வரும்படி வருந்தி ஜெபிப்பதற்குப் பதிலாக, அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து அவருக்குரிய முக்கிய இடத்தை அவருக்குக் கொடுக்க வேண்டியதல்லவா நம் கடமை? இவ்விதமாகத் தங்களுடைய தனிப்பட்ட ஜீவியத்திலும், சமுதாய ஜீவியத்திலும் அவருக்கு முக்கிய இடம் கொடுக்கிறவர்கள் உண்மையாகவே மிகுந்த பலனடைகிறார்கள்.

## தேற்றரவாளன்

யோவான் சுவிசேஷத்தில் நான்கு தடவை பரிசுத்த ஆவியானவரைத் தேற்றரவாளனென்று கிறிஸ்து கூறியிருக்கிறார். முதல் தடவை அவரை வேறொரு தேற்றரவாளன் (யோவான் 14: 16) என்றழைத்தார். நம் ஆண்டவர் தாமே பூலோகத்திலிருந்தபொழுது தாம் நேசித்தவர்களுக்குத் தேற்றரவாளராகவும் பாதுகாப்பாளராகவுமிருந்தார். ஆனால் இப்பொழுதோ அவர் அவர்களை விட்டுப் பிரியவேண்டியிருந்தது. ஆகையால் அவருக்குப்

பதிலாக இன்னொருவர் அவரைப்போல அவர்களைவிட்டுப் பிரியாமல் அவர்களோடு எப்பொழுதுமிருப்பதற்காக வருவார்.

இரண்டாவதாக, வாக்குப்பண்ணப்பட்ட தேற்றரவாளன்தாமே எல்லாக் காரியங்களையும் அவர்களுக்குப் போதிப்பார் (யோவான் 14: 26). ஆண்டவர் கூறியிருந்த அநேக காரியங்களைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. மேலும், அவர்களுடைய மந்த புத்தியினிமித்தமாக அநேக காரியங்களை அவர் அவர்களுக்குக் கூறவில்லை (யோவான் 16: 12). ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர்களுக்குத் தெளிவாகப் போதிப்பார். கிறிஸ்துவின் போதனைகளையும் அவர்களுக்கு அவர் நினைப்பூட்டுவார்.

மூன்றாவதாக, அந்தத் தேற்றரவாளன் சத்திய ஆவியாயிருப்பார், கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி பகருவார் (யோவான் 15: 26). இதைக் குறித்து இன்னொரு அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

கடைசியாக, அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்துணர்த்துவார் (யோவான் 16: 7-11).

### சகாயர்

டாக்டர் மொபட் (Moffat) என்பவர் யோவான் சுவிசேஷத்தில் 'தேற்றரவாளன்' என்கிற வார்த்தை காணப்படும் நான்குப் பகுதிகளிலும் அதற்குப் பதிலாக

"சகாயர்" என்கிற வார்த்தையைத் தம் புதிய ஆங்கில மொழி பெயர்ப்பில் உபயோகிக்கிருர்.

காலஞ்சென்ற பண்டிதர் டோரி (Torrey) பரிசுத்த ஆவியானவரை நம்முடைய தெய்வீகச் சகாயராகக் கொண்டிருப்பதைக் குறித்து ஒரு நல்ல உதாரணம் கொடுத்திருக்கிருர். அவர் கூறியதாவது :

"நான் வற்புறுத்தலின் பேரிலேயே கிறிஸ்தவ ஊழியத்தில் நுழைந்தேன். போதகனுகமாட்டேனென்று தீர்மானித்திருந்ததினல், அநேக ஆண்டுகளாக நான் கிறிஸ்தவனுவதற்கு விரும்பவில்லை. நான் குணப்பட்ட அன்றிரவு 'நான் போதகனுவேன்' என்பதுதான் என் முக்கிய பொருத்தனை. ஆனல், இயற்கை சுபாவப்படி போதகனுவதற்கு தகுதியற்றவன் நான். அளவுக்குமிஞ்சி பயந்த சுபாவமுள்ளவன். வேத சாஸ்திரக் கல்லூரியில் சேரும்வரை ஒரு ஜெபக் கூட்டத்தில்கூட நான் பேசியதில்லை. முதல் முதலாக நான் பேசிய அனுபவம் வேதனையான அனுபவமாயிருந்தது. என் ஊழியத்தின் ஆரம்பத்தில் நான் பிரசங்கங்களை எழுதி மனப்பாடம் செய்வதுண்டு. பிறகு மாலை ஆராதனை முடிந்து, என் பிரசங்கமும் முடிந்தவுடன் இன்னுமொரு வாரம் கவலைப் படவேண்டிய அவசியமில்லையென்று ஒரு பெரிய பாரம் நீங்கியதைப்போன்ற உணர்ச்சி ஏற்படும். இவ்விதமாக, பிரசங்கம் செய்வது ஒரு வேதனையாக விருந்தது.

"ஆனல், சந்தோஷமான ஒருநாள் வந்தது. அன்று ஒரு புதிய எண்ணம் என்னை ஆட்கொண்டது. நானும்

அந்த எண்ணத்தைப் பற்றிக்கொண்டேன். நான் பிரசங்கஞ்செய்ய எழுந்து நின்றவுடன், இன்னொருவர் என்னருகில் நிற்கிறார். மக்கள் என்னைமட்டும் பார்த்தாலும், பொறுப்பு முழுவதும் உண்மையாகவே அவர்மேல் தானிருக்கிறது. அவரும் அதை ஏற்றுக்கொள்ள வல்லவராயிருக்கிறார். ஆகையால் நான் செய்யவேண்டியதெல்லாம் எவ்வளவு தூரம் மக்கள் பார்வைக்கு என்னை விலக்கிக் கொள்ளவேண்டுமோ அவ்வளவு தூரம் என்னை விலக்கி அவர் கிரியைசெய்ய அவருக்கு இடம் கொடுக்கவேண்டும். அதற்காகவே பிதாவானவர் அவரை அனுப்பினார் என்பதே அந்த எண்ணம்.

"அந்த நாளிலிருந்து பிரசங்கம்செய்வது ஒரு பாரமாகவோ அல்லது ஒரு கடமையாகவோ இல்லை. அது ஒரு இன்பமான சிலாக்கியமாகவிருந்தது. அதற்குப் பிறகு நான் கவலைப்படவுமில்லை, பாரப்படவுமில்லை. ஆராதனையை நடத்தவேண்டிய பிரகாரம் அவரே நடத்துகிறார். சில வேளைகளில் நான் நினைத்த பிரகாரம் காரியங்கள் நடைபெறாவிட்டாலும், எல்லாம் சரிவர நடக்கிறதென்று எனக்குத் தெரியும். அநேக முறை நான் பிரசங்கம்செய்ய எழுந்து நின்றபொழுது எனக்காக எல்லாவற்றையுஞ் செய்ய அவர் அங்கேயிருக்கிறாரென்ற எண்ணம் என்னை ஆட்கொண்டவுடன் என் இருதயத்தைச் சொல்லமுடியாத சந்தோஷம் நிரப்பும்."

பரிசுத்த ஆவியானவர் பிரசங்கிமாருக்கும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் மாத்திரம் சகாயரல்லர். நாம் தினந்தோறும் செய்யும் எல்லாக் காரியங்களிலும் அவருக்கு

முக்கியத்துவம் கொடுக்கும்பொழுது அவர் நம் சகாயராகவுமிருப்பார். கடையிலும், அலுவலகத்திலும், பாடசாலையிலும், வீட்டிலும், மற்ற எல்லா இடங்களிலும் அவர் நம் சகாயராயிருப்பார். அவருடைய சகாயம் அற்புதமானது !

## சத்திய ஆவியானவர்

"சத்திய ஆவியாகிய அவர் வரும்பொழுது, **சகல சத்தியத்திற்குள்ளும்** உங்களை நடத்துவார்" (யோவான் 16: 13) என்று நம் ஆண்டவர் முன்னறிவித்தார். இந்த வாக்குத்தத்தத்தில் "உங்களை" என்ற வார்த்தைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கிறிஸ்து தம் அப்போஸ்தலர்களைப் பார்த்துப் பேசினார். இந்த வாக்குத்தத்தம் அவர்களுக்கு மாத்திரம் உரியது. யோவான் 14: 26-லும் இதே வாக்குத்தத்தம் இன்னொரு விதமாகக் கொடுக்கப்பட்டது. "அவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார்." இந்த வாக்குத்தத்தம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உரியது அல்ல என்பது நிச்சயம். அப்போஸ்தலர்களைத் தவிர வேறு யார் "நான் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தப்பட்டிருக்கிறேன்" அல்லது "பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் எனக்குப் போதித்திருக்கிறார்" என்று கூறக்கூடும் ?

இந்த வாக்குத்தத்தத்தின் அர்த்தமாவது : பூர்வ காலத்தில் தீர்க்கதரிசிகளுக்குக் கிடைத்த வெளிப்படுத்தல் பூரணமானதல்ல. தாம் பூமியிலிருந்த காலத்தில் கிறிஸ்துவும் சில சத்தியங்களை வெளிப்படுத்தினார்.

ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்குப் பின்பு தான் பூரண வெளிப்படுத்தல். அப்போஸ்தலர் மூலமாக அவர் அருளின வார்த்தைகளே இறுதி வார்த்தைகள். அவற்றிற்குப் பிறகு வேறொரு வெளிப்படுத்தல் கிடையாது. பரிசுத்தவான்களிடம் என்றென்றைக்குமாகச் சத்தியம் ஒப்படைக்கப்பட்டது (யூதா 3). பரிசுத்த ஆவியானவரே அப்போஸ்தலர்களை **எல்லாசத்தியத்திற்குள்ளும்** நடத்துவார். அப்போஸ்தலர்களுடைய நிருபங்களில் தேவனுடைய ஆலோசனைகளைக்குறித்தும், அவருடைய அன்பைக்குறித்தும், அவருடைய வழிகளைக்குறித்தும் நாம் அறியும் சத்தியங்கள் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அருளப்பட்ட கடைசி வெளிப்படுத்தலே என்று கிறிஸ்துதாமே கூறியிருக்கிறார்.

ஆகையால், சத்திய ஆவியானவர்தாமே புதிய ஏற்பாட்டின் உண்மையான ஆசிரியராவார். அப்போஸ்தலர்களுடைய போதனைகளெல்லாம் அவருடைய போதனைகளே. இவ்விதமாகத் தேவனுடைய **இறுதி வார்த்தை** நமக்கு இப்பூலோகத்தில் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## பரிசுத்த ஆவியை எதிர்த்தல்

பரிசுத்த ஆவியானவரை அநேக வழிகளில் நாம் எதிர்த்து அவருடைய கிரியையைத் தடை செய்யக் கூடும்.

1. அவரை எதிர்ப்பது (அப். 7: 51)
2. அவரைத் துக்கப்படுத்துவது (எபேசியர் 4: 30)
3. அவரை அவித்துப்போடுவது (I தெச. 5: 19)

அவரை எதிர்ப்பதென்ருல் என்னவென்று கவனிப்போம். யூத மக்கள் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்காகத் தேவ ஆவியானவர் அவர்களோடு போராடிக் கொண்டிருந்தார். அநேக முறை அவர்கள் அவருக்குச் செவி கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள். மறுபடியுமொருமுறை ஸ்தேவான் மூலமாக அப்போஸ்தலர் 7-ம் அதிகாரத்தில் கூறியிருக்கிறபடி அவர் பேசிஞர். ஆனுல் அவர்கள் "மூர்க்கமடைந்து அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்." 51-ம் வசனத்தில் "நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" என்று அவர்களைப்பற்றிக் கூறியிருப்பது எவ்வளவு உண்மையான காரியம்!

அந்த நாட்களில் இஸ்ரவேல் ஜாதியாருக்குச் செய்ததையே பரிசுத்தஆவியானவர் இந்த நாட்களில்தனிப்பட்ட மனிதருக்குச் செய்கிருர். மனிதரோடு போராடி அவர்களை இரட்சகரின் பாதத்தண்டைக்கு நடத்தும் பணியில் அவர் ஈடுபட்டிருக்கிருர். ஆனுல், என்ன பரிதாபம்! அநேகர் ஸ்தேவானை எதிர்த்த ஜனங்களைப்போலவேயிருக்கிருர்கள். அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்கிருர்கள். அவர்களுடைய நித்தியமான ஆத்துமாக்களின் தேவை அவர்களுக்குக்காட்டப்படுகிறது. அதைக்கேட்டு ஓரளவுக்கு அவர்கள் உணர்த்தப்படுகிருர்கள். ஆனுல் வேறு பல காரியங்கள் குறுக்கிட்டு அவர்களுடைய கவனத்தைத் திருப்பி விடுகின்றன. அவர்களுடைய ஆவலும், பாவ உணர்வும் மங்கிவிடுகின்றன. கவலையற்றவர்களாய் மறுபடியும் பழைய ஜீவியத்தில் அவர்கள்

நுழைந்து விடுகிறார்கள். இவ்விதமாய்ப் பரிசுத்த ஆவியை அவர்கள் எதிர்க்கிறார்கள்.

இதனால் நித்தியமாக அவர்கள் கைவிடப்படுவார்களா? இல்லை. மறுபடியும், மறுபடியும் எதிர்க்கப்பட்டாலும், தேவ ஆவியானவர் கிருபை நிறைந்தவர். "கிருபையின் ஆவி" என்றே அவர் அழைக்கப்படுகிறார். இரக்கத்தினால் அவர் மறுபடியும் போராடலாம், மறுபடியும் ஒரு ஆத்துமா உணர்த்தப்படலாம். இன்னும் அவரை எதிர்க்கிறார்களா? அவருடைய சத்தத்தை அசட்டை செய்கிறார்களா? பொறுமையுள்ள அவர் மறுபடியும் கிருபையாகப் போராடுவார்.

ஆனால் மனிதன் அவருடைய பொறுமையை அவமதித்து அவரை அசட்டை செய்யாதபடி, தேவன்தாமே பரிசுத்த வேதத்தில் ஒரு எச்சரிப்புக் கொடுத்திருக்கிறார். "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" (ஆதியாகமம் 6: 3).

### பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தல்

இந்தப் பாவத்தைக் குறிக்கும் வேதப் பகுதியைக் கவனமாக வாசிப்போம், (எபேசியர் 4: 30). இந்த வசனம் அநேக முறை "பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தி அனுப்பிவிடாதேயுங்கள்" என்று பொருள்படும்படி உபயோகிக்கப்படுகிறது. ஆனால் "அனுப்பிவிடாதேயுங்கள்" என்று அந்த வசனம் கூறவில்லை. கனவானொருவர் ஒரு வருடம் வெளிநாடுகளில் பிரயாணம்செய்ய விரும்பினார். தம் வீட்டைப் பூட்டி சாமான்களையெல்லாம்

அடைத்து வைத்துவிடாதபடி வீட்டைக் கவனித்துக் கொள்ள ஒரு ஆளை ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார். கொஞ்ச காலம் எல்லாம் நன்றாயிருந்தது. திடீரென்று ஒருநாள் ஒரு அறையில் பெரிய சத்தமொன்று கேட்டது. வீட்டின் காப்பாளன் மாடிக்கு ஓடிச்சென்று பார்க்கும்பொழுது கூரையின் ஒரு பெரிய பாகம் இடிந்து விழுந்து கொஞ்சம் மரச்சாமான்களை உடைத்திருந்தது. மற்ற இடங்களில், தூசி பரவியிருந்தது.

இதைக் கண்டு அவன் துக்கப்பட்டான். ஆனால் அதற்காகத் தன் பெட்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றுவிடவில்லை. தன்னுடைய மற்ற வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, உடைந்ததைப் பழுது பார்ப்பதில் ஈடுபட்டான். கூரையை ஆள் வைத்துப் பழுது பார்த்தான், உடைந்த மரச் சாமான்களும் பழுது பார்க்கப்பட்டன. தூசியையும் அழுக்கையும் அகற்றி அறையைச் சுத்தப்படுத்தினான் அவன்.

ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும்பொழுது நடப்பது இதுதான். உண்மையுள்ள காப்பாளரான அவர் நம்மைவிட்டுப் போய்விடாமல், நம் ஆத்துமாவில் ஏற்பட்ட ஆவிக்குரிய சேதத்தைச் சரிப்படுத்துவதில் ஈடுபடுகிறார். நம் உள்ளங்களில் அவர் வழக்கமாக அருளும் சந்தோஷத்தையும் ஆறுதலையும் அருளாமல், நம் உள்ளங்களை ஆராயவும், குறையை அறிக்கையிடவும் நமக்கு உதவி செய்து நம்மைத் திருத்துகிறார்.

"பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவது என்றால் என்ன? பொய் சொல்லுவதாலும், திருடுவதாலும், ஆணையிடுவதாலும், இன்னும் ஏதாவது அக்கிரமம் செய்வதாலும் அவர் துக்கப்படுகிறாரா?" என்று சாதாரணமாகக் கேட்கிறார்கள். இது ஒரு முக்கியமான கேள்விதான். மேற்கூறியவற்றைச் செய்தால் பரிசுத்த ஆவியானவர் அதிகமாகத் துக்கப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. அவர் **பரிசுத்த** ஆவியானவர். அசுத்தமானதெதுவும் அவரை நிச்சயமாகத் துக்கப்படுத்தும். ஆனால், வெளிப்படையாக நல்ல ஜீவியம்செய்கிற ஒருவனும் அவரைத் துக்கப்படுத்தக்கூடும்.

நான் ஒரு நண்பனின் வீட்டுக்குச் சென்றேன் என்று வைத்துக்கொள்வோம். என்னை வரவேற்று உபசரித்த சகோதரி போட்டோ படங்கள் உள்ள ஒரு புத்தகத்தை எனக்குக் காட்டி விளக்கிக்கொண்டிருந்தாள். ஒரு படத்தை அவள்காட்டி, "இது எனக்கு நெருங்கின ஒரு உறவினர், அவர் தென் ஆப்பிரிக்காவிலிருக்கிறார்" என்று கூறிக்கொண்டிருந்தாள். திடீரென அவள் என்னை நோக்கியபொழுது, நான் ஜன்னலுக்கு வெளியே என் பார்வையைச் செலுத்தித்தெருவில் நடக்கிற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய அக்கறையின்மை அவளைத் துக்கப்படுத்திற்று. "இந்தப்புத்தகத்தை இவருக்குக் காட்டுவதில் பயனில்லை. இவருக்கு இதைப் பார்க்கவேண்டுமென்ற அக்கறையில்லை" என்று தனக்குள் கூறிக்கொண்டு புத்தகத்தை மூடி கீழே வைத்துவிட்டாள்.

பரிசுத்த ஆவியானவரும் இவ்விதமே பல ஆச்சரியமான காட்சிகளை நமக்குக்காட்ட விரும்புகிறார். கிறிஸ்துவின் அழகையும், அன்பையும், மகிமையையும் விவரிக்கும் காட்சிகள் அவை. அவர் இவற்றையெல்லாம் நமக்கு விவரிக்கும்பொழுது நாம் வேறு திசையை நோக்கி உலகக் காரியங்களில் ஈடுபட்டிருப்போமானால், அவர் துக்கப்பட்டுத் தாம் விவரிப்பதை நிறுத்திவிடுவார். கிறிஸ்துவை நம் இருதயங்களுக்கு வெளிப்படுத்தாமல், நம் சந்தோஷத்தை எடுத்துப்போட்டு நம்மைக் கடிந்து கொள்வார்.

இசையில் தேர்ந்த பெண்ணொருத்தி ஒரு சமயம் தன் சங்கீதக் கருவியில் இனிமையான ஒரு இராகம் வாசித்தாள். அவளுக்கே அது மிகவும் அற்புதமாக இருந்தது. ஆனால் மறுமுறை அதே இராகத்தை அவள் வாசிக்க முயன்றபொழுது அவளால் முடியவில்லை. இறந்துபோன நாதமாகவிருந்தது அந்த இராகம்.

இதை வாசிக்கும் உன் ஜீவியம் இனிமை இழந்திருக்கிறதா? ஒரு காலத்தில் மகிழ்ச்சியின் இனிமை உன்னில் நிறைந்திருந்தது. இப்பொழுது அது எங்கே? அந்த இனிய நாதம் மறைந்துவிட்டது. இன்னிசையான பரம சந்தோஷம் இப்போது இறந்துபோன நாதமாயிற்று.

இப்பொழுது உன் உள்ளத்தில் “நான் அதை மறுபடியும் பெறக்கூடுமோ? கூடுமானால் எப்படிப் பெறமுடியும்? மறுபடியும் என் வாழ்க்கை பிரகாசத்திலும், என் உள்ளம் மகிழ்ச்சியிலும் நிறைய

வேண்டுமானால் நான் என்ன செய்யவேண்டும்?" என்ற கேள்விகள் எழுகின்றன. ஓசியா பதினான்காம் அதிகாரத்தை வாசித்துப்பார். முதல் வசனத்தில் தேவன் பின் வாங்கிப்போன தம் மக்களைச் சீர்ப்படுத்த உண்மையாகவே விரும்புகிறாரென்று பார்க்கிறோம். ஆகையால் அவர் உன்னைத் தடை செய்யமாட்டார்.

## சுய முயற்சி

நம்முடைய அனல்குன்றிய தன்மையினாலும், பின் வாங்குதலினாலும் நாம் இழந்துவிட்ட சந்தோஷத்தை திரும்பப்பெறுவதற்குப் பெரியதடையாயிருப்பது நம்சுய முயற்சியே. சுயமுயற்சியினால் சீர்ப்படுத்த முடியாததை நாம் சீர்ப்படுத்த முயலுகிறோம். சந்தோஷத்தையோ, பாவத்தின்மேல் வெற்றியையோ, அல்லது ஊழியத்தையோ இலக்காக நாம் வைக்கும்பொழுது அது சுய முயற்சியாகிறது.

கடந்துபோன நாட்களை நினைத்து நம்முடைய வழிகளை ஆராய்வதும், நம்மையே சோதித்தறிவதும் நல்லது தான். ஆனால் இதனால்மட்டும் இழந்துபோன சந்தோஷம் திரும்பக் கிடைக்காது.

ஒரு சமயம் சிறு பெண்ணொருத்தி இசைக் கருவியொன்றை வாசித்துக் கொண்டிருந்தபொழுது அவ்வறையில் நான் நுழைந்தேன். என்னைக் கண்டு குழப்பமுற்று அவள் வாசிப்பதில் அநேக தவறுகள் செய்ய ஆரம்பித்தாள். உடனே தன் பார்வையைத் தனக்கு முன்னிருந்த இசைக் குறிப்புகளுள்ள தாளிலிருந்து திருப்

பித் தன் கைவிரல்களைக் கவனிக்க ஆரம்பித்தாள். தவறுகள் அதிகரித்தன. கடைசியில் சோர்வுற்றவளாய், வாசிப்பதை முழுவதும் நிறுத்திவிட்டாள் அவள். தன் கைவிரல்களைக் கவனிக்க ஆரம்பித்ததுதான் அவள் செய்த பெரிய தவறு. இசைக் குறிப்புகளுள்ள தாளின் மேலேயே தன் பார்வையை அவள் வைத்திருந்தாளானால் தன் தவறுகளைத் திருத்தியிருக்கக்கூடும்.

இவ்விதமாகவே, நாமும் நம் தோல்விகளையும், அனலும் வல்லமையுமற்ற நிலையையுமே கவனிக்கத் தொடங்குவோமானால் சோர்வுறுவோம். திருந்தும் வழி அதுவல்ல. நம்மை ஆராய்ந்து, அதே சமயத்தில் கிறிஸ்துவையும் நோக்கிப் பார்த்து அவருடைய பிரசன்னத்தைத் தேடுவோமானால், இழந்த இனிமையை மறுபடியும் பெறுவோம். அப்படிச்செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்வார். நம்மை மறந்து கிறிஸ்துவை நோக்கி அவரை நம்முன் வைப்பதுதான் பரிசுத்த ஆவியை பிரியப்படுத்துவதாகும்.

ஒரு சிறு அசட்டையோ, அல்லது அவருடைய அன்பைக் குறித்த அக்கறையின்மையோ அவரைத் துக்கப்படுத்தக்கூடும். அதே சமயத்தில் ஒரு சிறு காரியமும் அவரைப் பிரியப்படுத்தும். கிறிஸ்துவை இன்னும் அதிகமாக அறிய வேண்டுமென்கிற சிறு ஆவல், தேவனுடைய பெரிய நோக்கங்களை இன்னும் அதிகமாகப் புரிந்துக்கொள்ள வேண்டுமென்கிற சிறு வாஞ்சை அவரை அதிகமாகப் பிரியப்படுத்தி அவருடைய அன்பையும் ஆதரவையும் நமக்குச் சம்பாதித்துக் கொடுக்கக்கூடும்.

## இழந்த இனிமையைப் பெறுவது

இசைக் கருவியை வாசித்த அந்தப் பெண்ணுக்கு அனுபவமும் அன்புமுள்ள ஒரு சங்கீத நிபுணரின் உதவியிருந்திருக்குமானால் அவள் இழந்த இசையை மறுபடியும் பெற்றிருக்கக்கூடும். தன் கைவிரல்களையும் அவள் சரியானபடி உபயோகித்திருப்பாள்.

இவ்விதமான உதவியை நமக்குஅளிக்கக்கூடியவர் பரிசுத்த ஆவியானவரே. ஆனால் நாம் அவருக்கு இடங் கொடுக்கவேண்டும்.

அந்நியரொருவர் ஒரு சமயம் ப்ரெய்பர்க்(Freiburg) என்ற இடத்திலுள்ள பிரம்மாண்டமான தேவாலயத்திலிருக்கும் பிரசித்திபெற்ற இசைக் கருவியை உபயோகிக்க அனுமதி கேட்டார். அக்கருவிக்குப் பொறுப்பாயிருந்தவர் முதலில் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். ஆனால் அதிக வற்புறுத்தலின்பேரில் அனுமதி கிடைத்தது. அந்த அந்நியர் இசைக் கருவியை வாசிக்க ஆரம்பித்தார். அற்புதமான இனிய நாதமெழும்பி அந்த இடத்தை நிறைத்தது. ஆச்சரியமுற்றவராய், “ஐயா, உங்கள் பெயர் என்ன?” என்று பொறுப்பாளர் அந்த அந்நியரை வினவினர். “மெண்டல்சான்” எனப் பதிலளித்தார் அந்த அந்நியர். ஆம், உலகப் புகழ்பெற்ற இசை வல்லுனரான மெண்டல்சான் தான் அந்த அந்நியர். அதைக் கேட்டவுடன், “உமக்கா நான் அனுமதி கொடுக்க மறுத்தேன்?” என்று வருத்தப்பட்டார் அந்த இசைக் கருவிக்குப் பொறுப்பாயிருந்தவர்.

இவ்விதமாகவே பரிசுத்த ஆவியானவரும் நம் இருதயங்களிலும் ஜீவியங்களிலும் இன்னிசை யெழுப்ப விரும்புகிறார். ஆனால், எத்தனைமுறை நாம் அவருக்கு அனுமதி கொடுக்க மறுத்து விடுகிறோம்! எத்தனைமுறை அவரைத் தடை செய்கிறோம்! நம்மில் எத்தனை பேர் "உமக்கா அனுமதிகொடுக்க மறுத்தேன்?" என்று வருத்தப்பட வேண்டியிருக்கிறது!

அசதியை விட்டு நாம் எழுந்திருப்போம். பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆட்கொள்வதற்குத் தடையாயிருக்கும் எல்லாவற்றையும் அகற்றிவிடுவதற்குப் போதிய கிருபையைத் தேடுவோம். நம் அசட்டையினாலும், அக்கறையின்மையினாலும் அவரைத் துக்கப் படுத்தாதிருப்போம். அப்பொழுது அவர் மறுபடியும் நம்மைச் சந்தோஷத்தினால் நிரப்புவார். நாம் இழந்து போன இனிய ஐக்கியத்தை மறுபடியும் பெறுவோம். நம் ஜீவியத்திலும் சாட்சியிலும் இழந்துபோன வல்லமை மறுபடியும் காணப்படும். ஜெபத்தைச் சந்தோஷமான சிலாக்கியமாகக் கருதுவோம். பரிசுத்த வேதத்தை விரும்பி வாசிப்போம். அதில் உள்ள அற்புதமான காரியங்களைக் காண நம் கண்கள் திறக்கப்படும்.

## அச்சாரம்

நமக்கென்று காத்திருக்கும் மகிமையான எதிர் காலத்தைக் குறித்துப் பேசும்பொழுது, அதற்கென்று தேவனே நம்மை ஆயத்தப்படுத்தி ஆவியின் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறாரென்று பவுல் கூறியிருக்கிறார்

(2 கொரிந்தியர் 5: 5). இவ்விதமாக நமக்கு வைக்கப்பட்டிருக்கும் சுதந்தரத்தின் அச்சாரமாய்ப் பரிசுத்த ஆவியானவரிருக்கிறூர் (எபேசியர் 1: 14).

தேவனுக்குச் சொந்தமானதையும், நித்தியமாக அவருடைய மகிமைக்குரியதையும் **தேவனுக்கென்று** பத்திரப்படுத்த தேவனுடைய **முத்திரையாக** அவர் நமக்குக் கொடுக்கப்பட்டார். ஆனுல் **அச்சாரமாக, நம்முடைய** ஆறுதலுக்காகவும், உறுதிக்காகவும் நம் இருதயங்களில் அவரைப் பெற்றிருக்கிறேம். (II கொரிந்தியர் 1; 22).

"அச்சாரம்" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இன்னும் ஆழமான அர்த்தமுண்டு. பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கிற சுதந்தரத்தை ஒருநாளில் நாம் சுதந்தரித்துக் கொள்வோமென்பதற்குப் பிணையாகப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். அது மட்டுமல்ல, அந்தச் சுதந்தரத்தின் முன்தொகையாகவும் அவர் கொடுக்கப்பட்டார். ஆங்கில மொழிபெயர்ப்பொன்றில் "அச்சாரம்" என்கிற வார்த்தைக்குப் பதிலாக II கொரிந்தியர் 5: 5-லும் எபேசியர் 1: 14-லும் "பிணையும் முன் தொகையும்" என்று மொழி பெயர்த்திருக்கிறது.

நான் கப்பற் பிரயாணம் செய்ய எண்ணி, என்னுடைய பன்னிரண்டு வயது மகனையும் அழைத்துச் செல்வேனென்று அவனுக்கு வாக்குக் கொடுத்தேன். அவனுக்கென்று ஒரு தூரதிருஷ்டிக் கண்ணுடியையும் வாங்கிக் கொடுத்தேன். அந்தப் பிரயாணத்தில் அவனை

அழைத்துச் செல்வேனென்பதற்கு ஒரு உறுதியாக அந்தக் கண்ணுடியிருந்தது.

அது மட்டுமல்ல, கப்பல் கரையை நெருங்கின பொழுது, அந்தக் கண்ணுடியை உபயோகித்துக் கரையில் உள்ள குன்றுகளைக் கண்டான் என் மகன். எனக்கோ ஒன்றுமே காணப்படவில்லை. பிறகு மங்கலாகக் குன்றுகளை நான் காணத் தொடங்கியபொழுது, “சில மரங்களையும், வீடுகளையுங்கூட நான் காண்கிறேன்” என்று கத்திஞன் அவன்.

நாங்கள் சேரவேண்டிய கரையைத் தூரதிருஷ்டிக் கண்ணுடியின் உதவியால் அவன் தெளிவாகக்கண்டான். அச்சாரமாகிய பரிசுத்த ஆவியானவரும் இதையே நமக்குச் செய்கிருர். தெளிவான ஆவிக்குரிய தரிசனத்தை நமக்குஅளித்து, நாம் அனுபவிக்கப்போகிற நித்திய சுதந்தரத்தை இப்பொழுதே ஓரளவுக்கு அனுபவிக்கவும், பரலோகத்தின் சூழ்நிலையை இவ்வுலகத்திலேயே அறிந்து கொள்ளவும் உதவி செய்கிருர்.

ஆவியானவரைத் துக்கப்படுத்தாமல், அவருக்கு நம் ஜீவியங்களிலே இடம் கொடுத்தால்தான் இதையெல்லாம் அவர் நமக்காகச் செய்வார்.

## ஆட்கொள்ளப்படுதல்

வருந்தத்தக்க விஷயமொன்று யாதெனில் அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவர் தங்களில் வாசம் பண்ணுகிருர் என்பதில் தானே திருப்தியடைந்து, அவர்

தானே ஆட்கொள்ளவேண்டுமென்ற ஆவலில்லாமலிருக்கிறார்கள். நீயும் அப்படியிருக்கிறாயா? பரிசுத்த ஆவியானவர் உனக்குச் சொந்தமாயிருப்பதற்காகத் தேவனைத் துதிக்கிறாய். ஆனால் நீ பரிசுத்த ஆவியானவருக்குச் சொந்தமாயிருக்கிறாயா?

இந்த உலகத்திலே அநேக காரியங்களினால் ஆட்கொள்ளப்பட்ட மக்களிருக்கிறார்கள். சுவிசேஷங்களில் பிசாசுகளினால் ஆட்கொள்ளப்பட்டவர்களைக் குறித்து வாசிக்கிறோம். மகதலேனா மரியாளும் அவர்களில் ஒருத்தி. அவளுடைய சரீரம் ஏழு பிசாசுகளுக்கு இருப்பிடமாக இருந்தது. இன்னும் தங்கள் **சுயத்தினால் ஆட்கொள்ளப்பட்டவர்களும்** அநேகருண்டு. லேகியோனைப்போல அவர்கள் அநேகராயிருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் அப்படிப்பட்டவர்களை நாம் காணலாம். கௌரவமும், மரியாதையும் உள்ளவர்களாய், ஆவிக்குரிய காரியங்களில் மிதமிஞ்சிய வைராக்கியமும் உற்சாகமும் கூடாதென்று கூறித் திரிவார்கள். அவர்கள் ஜெபங்களில் தான் எவ்வளவு சுருக்கம், எவ்வளவு ஒழுங்கு! எனினும் கொஞ்சங்கூட உருக்கம்கிடையாது. ஆனால் நீதிமான்களின் ஜெபம் கேட்கப்படவேண்டுமானால் அதில் உருக்கமும் இருக்கவேண்டும் (யாக்கோபு 5: 16).

இன்னும் மேற்கூறியவர்களைத் தவிர **பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட** மக்களும் இந்த உலகத்தில் உண்டு. இவர்களும் லேகியோனைப்போல அநேகராயிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!

தங்கள் சிந்தனைகளில் உலக சிந்தையற்றவர்களாயும், ஜீவியங்களில் சுயவெறுப்புள்ளவர்களாயும், மற்றவர்களை இரட்சகரிடம் நடத்துவதில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவர்களாயும் ஜெபத்தில் வல்லமையுள்ளவர்களாயும் அவர்கள் இருப்பதே பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஆட்கொண்டிருக்கிறாரென்பதற்கு அத்தாட்சி. அவர்களுடைய கண்களைக் கிறிஸ்துவின் மகிமையினாலும், உதடுகளை அவருடைய துதியினாலும், இருதயங்களை அவருடைய அன்பினாலும் அவர் நிறைக்கிறார். ஒரு மனிதனைப் பரிசுத்த ஆவியானவர் ஆட்கொள்ளும்பொழுது, அவனுடைய நோக்கங்களிலும் ஜீவியத்திலும் **கிறிஸ்துவைப் பிரதானமாக்குவதே** அவருடைய கிரியை.

அனலற்ற, ஜீவனற்ற இந்த நாட்களில் கிறிஸ்துவினாலும், பரிசுத்த ஆவியானவராலும் ஆட்கொள்ளப்பட்ட அநேகர் எழுப்பப்படவேண்டுமென்று நாம் பிரார்த்திக்கவேண்டுமல்லவா? நமக்காகவும் அவ்விதமாகவே பிரார்த்திப்போமாக.

## ஆவியினால் நிறைந்திருத்தல்

எந்தப் பாத்திரமும் வெறுமையாக்கப்படாமல் நிறைக்கப்படுவதில்லை. நாம் ஆவியினால் நிரப்பப்படவேண்டுமானால், நம் இருதயத்திலும் மனத்திலும் உள்ள எல்லாத் தீய காரியங்களையும் வெளியேற்றவேண்டும். ஐக்கியத்தைத் தடை செய்யும் எல்லாக் காரியங்களும் வெளியேற்றப்படவேண்டும்.

நாம் ஆவியின் நிறைவை நாடவேண்டியதவசியம். ஆனால், **தேவன் நம்மை நமக்குள்ளிருந்தே நிறைக்**

கிருர், வெளியிலிருந்தல்லவென்பதைச் சிந்தனையில் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

உன் வீட்டிற்கு வரும் விருந்தாளி உன் வீட்டை நிறைக்கமாட்டார். நீ அவரை அனுமதித்த அந்தப் பகுதியிலேதானிருப்பார். ஆனால், முழு வீட்டிலும் அவருக்குச் சுயாதீனம் அளித்து எல்லா அறைகளின் சாவிகளையும் அவரிடம் கொடுத்தால் அப்பொழுது அந்த வீட்டை முழுவதுமாக நிறைத்துக் கொள்வார். அதை நிறைப்பதற்கென்று அவர் வெளியிலிருந்து வரவில்லை. முன்னாலேயே உள்ளேவந்த அவர், இப்பொழுது நீ முழுவதுமாக அவருக்கு ஒப்புக்கொடுக்கும்பொழுது, எல்லாவற்றையும் ஆட்கொள்ளுகிருர்.

பரிசுத்த ஆவியானவரும் அவ்விதமே செய்கிருர். நாம் அநேக முறை நம் ஜீவியத்திலும் நம் அனுபவத்திலும் சில பகுதிகளிலேயே அவருக்கு இடம் கொடுக்கிறோம். ஆனால் அவரோ முழுவதும் நம்மை ஆட்கொள்ள விரும்புகிருர். அவருடைய ஆளுகைக்கு நம்மை முழுவதுமாக நாம் ஒப்புக்கொடுக்கும்பொழுது, அவர் நம்மை ஆட்கொண்டு இவ்விதமாக நம்மை நிறைக்கிருர். இந்தச் சத்தியம் எவ்வளவு தெளிவாயிருக்கிறது!

### நிரப்பப்படுதலும் வெறுமையாக்கப்படுதலும்

எந்தப் பாத்திரமும் வெறுமையாக்கப்படாமல் நிறைக்கப்படுவதில்லையென்பது உண்மை. அதே மாதிரி ஒரு பாத்திரத்தை நிறைத்துக் கொண்டிருக்கும் வாயுவை வெளியேற்றவேண்டுமானால் அதை இன்னொரு பொருளினால் நிறைக்கவேண்டும்.

இதிலிருந்து ஒரு கேள்வி எழலாம். நாம் நிறைக்கப் படுவதற்காக வெறுமையாக்கப்படவேண்டுமா? அல்லது வெறுமையாக்கப்படுவதற்காக நிறைக்கப்பட வேண் டுமா? ஒரு சாரார் நிறைக்கப்படவேண்டுமேயாயின் நாம் வெறுமையாக்கப்படவேண்டுமென்று கூறுகிறார் கள். ஆகையால் ஊக்கமுள்ள அநேகர் தொடர்ந்த ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும், சுயவெறுப்பினா லும், முயற்சியினாலும் தடைகளையெல்லாம் நீக்க முயலு கிறார்கள். ஆனால் எப்படியோ இதன் மூலம் சித்தி உண்டாகிறதில்லை.

என் கையில் ஒரு பாத்திரத்தை வைத்திருக்கிறே னென்று நினைத்துக்கொள்வோம். பார்ப்பதற்கு அது வெறுமையாயிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அது வாயுவினால் நிறைந்திருக்கிறது. அதை வெறுமையாக்குவதெப்படி? பலமாக அதைக் குலுக்கு வதினாலோ அல்லது ஒரு துணியை வைத்துத் துடைப்ப தாலோ அல்ல. அதை மேஜையில் நிறுத்தி வைத்துத் தண்ணீரினால் நிறைப்பதால், காற்றை வெளியேற்றி விடலாம்.

நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் தகுதியற்ற நோக்கங் களும், அசுத்த எண்ணங்களும், தவறான இச்சைகளும், சுயநலமும் இன்னும் அநேக தீய காரியங்களும் காணப் படுகின்றன. தேவாலயத்திலிருந்து ஆடு, மாடு விற்பவர் களும், காசுக்காரர்களும் விரட்டப்பட்டதைப்போல இவைகளும் விரட்டப்படவேண்டும். யோவான் 2-ம் அதிகாரத்தில்கூட தண்ணீர் ஜாடிகள் **நிறைக்கப்படுதல்**

நடந்த பின்பே தேவாலயம் சுத்திகரிக்கப்படுதல் நடப்பதைக் காண்கிறோம்.

இவ்விதமே, நாம் விசுவாசத்தோடும் அன்போடும் கிறிஸ்துவின் முகத்தை உற்று நோக்கி அவர் நமக்கு மிகவும் விரும்பத்தக்கவராகும்பொழுது அவருடைய ஆவியானவர் கிறிஸ்துவினிமித்தம் நம்மை நிறைக்கிறார். தீயவை வெளியேறுகின்றன. பண்டிதர் சாம்பர்ஸ் (Chambers) கூறியதுபோல "அன்பின் சுத்திகரிக்கும் சக்தியை" நாம் அனுபவிக்கிறோம். கிறிஸ்துவின் கவர்ச்சி உலகத்தின் காரியங்களையும் பாவத்தையும் நாம் அருவருக்கச் செய்கிறது.

கூறவில்லை. அதாவது கப்பல் நீர்த் தேக்கத்தினுள் நுழைந்தவுடன் **வலது பக்கக் கதவு அடைக்கப்பட்டது.** அது அடைக்கப்படவில்லையானால், இடது பக்கத்திலிருந்து உள்ளே பாய்ந்த தண்ணீர் தேக்கத்தின் நீர் மட்டத்தை உயர்த்தாதபடி வெளியே பாய்ந்திருக்கும்.

இவ்விதமாகவே கிறிஸ்துவின் அன்பு ஊற்றப்படும்படியாகவும், ஆவியானவர் உன் ஜீவியத்தை நிறைத்து ஆளும்படியாகவும் உன் இருதயக் கதவைத் திறந்து அவருக்கு இடம் கொடுக்கும்பொழுதே, பாவத்திற்குத் திறந்திருக்கும் மற்ற கதவை நீ அடைத்து விடவேண்டும். இல்லையானால், ஆசீர்வாதமும் சந்தோஷமும் உள்ளே நிலைத்திராதபடி வெளியே பாய்ந்தோடிவிடும்.

“நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டு”—அறையின் கதவை மட்டுமல்ல, உன் அந்தரங்க ஆத்துமக் கதவையும் பூட்டு. **திறந்த பலகணி** ஒரு பக்கத்திலும், அடைத்த கதவு இன்னொரு பக்கத்திலும் இருக்கட்டும். தானியேலைப்போல ஆத்துமப் பலகணி தேவனுக்குத் திறந்திருக்கட்டும். அதே சமயத்திலே ஆத்துமக் கதவு தீங்குக்கு அடைக்கப்பட்டிருக்கட்டும்.

## இவ்வனுபவம் சாதாரணமானதா?
## அபூர்வமானதா?

பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைக் குறித்துப் பழைய ஏற்பாட்டில் அநேக காரியங்கள் கூறப்படுகின்றன. அவற்றைச் சரியானபடி நாம் புரிந்துகொள்ள

வேண்டுமானால் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்கும் தற்காலத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் நன்றாக மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டின் காலங்களில், முன்னொரு அத்தியாயத்தில் நாம் பார்த்தபடி, பரிசுத்த ஆவியானவர் சில மனிதர்மேல் இறங்கினார். ஆனால் மூன்று பேர் விஷயத்தில்மட்டும் (உதாரணமாக, கிதியோன்: நியாயாதிபதிகள் 6: 34) வேறொரு விதத்தில் இவ்வனுபவம் குறிக்கப்படுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் அந்தக் குறிப்பிட்ட ஆளை ஆடையாகப் **போர்த்திக்கொண்டார்** என்று அந்தச் சொற்றொடருக்கு அர்த்தம். அதாவது, ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, அந்நோக்கம் நிறைவேறும் வரை ஆவியானவர் அவனை ஆட்கொண்டார்.

ஆவியின் நிறைவைக் குறித்துப் பழைய ஏற்பாட்டில் நாம் காணும் சத்தியம் இதுதான். அவ்வனுபவம் அபூர்வமானதாகவேயிருந்தது. எல்லாருக்குமுரிய சாதாரணமான அனுபவமாக இருக்கவில்லை.

ஆவியானவர் யோவான் ஸ்நானகனையும், எலிசபெத்தையும், சகரியாவையும் (லூக்கா 1: 15, 41, 67), அப்போஸ்தலர் 4: 8-ல் பேதுருவையும், 13: 9-ல் பவுலையும் நிறைத்ததும் இவ்விதமாகவேயிருந்தது.

ஆனால் சிலருடைய விஷயத்தில் ஆவியின் நிறைவு சாதாரணமான வழக்கமான அனுபவமாயிருந்தது. "ஆவியினால் நிறைந்திருந்திருப்பது" அம்மனிதருடைய சுபாவமாயிருந்தது. அப்போஸ்தலர் 6: 3-ல் கூறப்படும் ஏழு பேரும், பர்னபாவும் (அப். 11: 24) அவ்விதமிருந்

தார்கள். பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவிலிருந்த சீஷர்களைக் குறித்தும் இவ்விதமே கூறப்படுகிறது (அப். 13: 52). இவ்வனுபவம் நிரந்தரமான அன்றாடக அனுபவமாயிருக்கவேண்டுமென்பதே தெய்வ சித்தமென்று எபேசியர் 5: 18-ல் காண்கிறோம். ஆனால் அப்படி ஜீவிக்கிறவர்கள் எவ்வளவு சொற்பம்!

இது ஒரு புதிதான காரியமல்ல. "எபேசியரில்" பரிசுத்த ஆவியானவரைப்பற்றி **அநேக காரியங்களைப்** பார்க்கிறோம். "கொலொசேயரில்" அவரைக் குறித்து அதிகம் கூறப்படவில்லை. ஆனால், கிறிஸ்துவின் சொந்த மகிமை வலியுறுத்தப்படுகிறது. எபேசியரில் "ஆவியினால் நிறைந்திருங்கள்" என்று எழுதின பவுல் கொலொசேயரில் "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே........பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (3: 16) என்று எழுதுகிறார். "வசனம்" என்பதற்கு அர்த்தம் என்ன? பண்டிதர் மொபட் (Moffatt) "கிறிஸ்துவின் **தூண்டுதல், ஊக்கம்** உங்கள் நடுவில் வாசமிருப்பதாக" என்று மொழி பெயர்க்கிறார். இதற்கும் எபேசியரில் கூறப்பட்டதற்கும் வித்தியாசமில்லை. ஒருவரோடொருவர் நாம் கொள்ளும் உறவுகளில் ஆவியானவரே நம்மை நிறைத்து ஊக்கப்படுத்துகிறார். இதையே கிறிஸ்துவின் வசனமும் நடைமுறையில் நிறைவேற்றுகிறது.

## அவர் இன்னுமதிகமாகவேண்டும்!

சில சமயங்களில் விசுவாசிகள் "தேவன் தம் ஆவியானவரை எனக்குக் கொடுத்திருக்கிறாரென்று எனக்குத் தெரியும். ஆனால் இன்னுமதிகமாக அவரைத் தர

வேண்டுமென்று நான் ஜெபிக்கவேண்டும்" என்று பெரு மூச்சோடு கூறுவதைக் கேட்டிருக்கிறோம்.

இதுசரியல்ல, ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம்தாழ்வான நிலையில் இருப்பதற்குக் காரணம் நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அதிகமாக தேவை என்பதல்ல. ஆனால் அவருக்கு நீயும் நானும் அதிகமாக தேவை என்பதே.

உன் வீட்டிலே சில வாரங்கள் தங்கும்படியாக ஒரு விருந்தாளி வந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நீ அவரை அன்போடு வரவேற்று நன்றாக உபசரிக்கிறாய். ஆனால் உன் வீட்டின் எந்தப் பகுதியில் அவர் வந்து தங்கினாரோ அந்தப் பகுதியிலேயே அவர் இருக்கவேண்டுமென்று விரும்புகிறாய்.

இவ்விதமான வரவேற்பைப் பரிசுத்த ஆவியானவர் விரும்பமாட்டார். நம்மிலே வாசம் பண்ணும்படியாக அவர் வந்திருக்கிறார். ஆனால் விருந்தாளியாகவல்ல, நம்மை முழுவதும் ஆட்கொள்ளுகிறவராக அவர் வந்திருக்கிறார். அவர் முழுவதும் ஆளவேண்டுமானால் நம் இருதயத்தின் அறைகளையெல்லாம் திறந்து வைத்து **எல்லாச் சாவிகளையும்** அவரிடம் கொடுக்கவேண்டும்.

இச்சம்பவத்தை பூரண பிரதிஷ்டை என்றோ, முழுவதும் ஒப்புக்கொடுத்தல் என்றோ எப்படி அழைத்தாலும் சரி, இவ்வனுபவம் முக்கியமேயன்றி, பெயர் முக்கியமல்ல. ஒன்றுமட்டும் நிச்சயம். நாம் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படவேண்டுமானால் அவர் **தடையின்றி நம்மை ஆளுவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.**

தற்காலத்தில் முக்கியமாகத் தேவையானவர்கள், தேவன் அருளியிருக்கும் சிலாக்கியங்களை விசுவாசத்தினலே தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும் விசுவாசிகளே. உலகப்பற்றற்றவர்களாய் ஆவியானவரால் நிரப்பப்பட்ட ஒரு கூட்டத்தாரைக்கொண்டு தெய்வ வல்லமை சாதிக்கக்கூடாத காரியங்களுண்டோ?

## பிதாவின் தூதர்

பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலிருந்து கிறிஸ்துவின் பிரதிநிதியாக மட்டுமல்ல, பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவராகவும் வந்திருக்கிருர் (யோவான் 15: 26). கிறிஸ்துவுக்கென்று ஒரு மணவாட்டியை ஆயத்தப்படுத்தி அவரிடம் கொண்டு வருவதே பூலோகத்தில் அவருடைய வருகையின் முக்கிய நோக்கம். ஆதியாகமம் 24-ம் அதிகாரத்தில் கூறப்படும் சம்பவம் இதை அழகாக விளக்குகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் ஏதாவதொரு சம்பவம் மிகவும் விரிவாக விவரிக்கப்பட்டிருக்குமாளுல், அதில் ஏதாவதொரு விசேஷமான போதனை புதைந்திருக்கக் கூடும். ஆகையால் இச்சம்பவம் அதிக விரிவாக அறுபத்தேழு வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறபடியால் இது மிகவும் முக்கியமானது. மேற்கொண்டு செல்லுவதற்கு முன் முழு அதிகாரத்தையும் வாசிப்பது நல்லது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நான்கு பேர்: ஒரு தகப்பன், ஆபிரகாம்; அவனுடைய மகன், ஈசாக்கு; பெயர் கொடுக்கப்படாத ஒரு வேலைக்காரன்; மணவாட்டியான ரெபெக்காள்.

ஆபிரகாம் தேவனுக்கு அடையாளமாயிருக்கிறான். தேவனாகிய பிதா பரிசுத்த ஆவியானவரைத் தம் தூதராக அனுப்பியதுபோல, ஆபிரகாமும் தன் நம்பிக்கைக்குரிய வேலைக்காரனைத் தன் மகனுக்கு ஒரு மணவாட்டியைக்கொண்டு வரும்படியாக அனுப்பினான். அவனுடைய குமாரனாகிய ஈசாக்கு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறான். ஆதியாகமம் 22-ல் அவன் மரித்தோரிலிருந்து பாவனையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டான், (எபிரேயர் 11: 19). ஆகையால், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறான்.

வேலைக்காரன் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறான். இந்த வேலைக்காரன் நாற்பது வருஷங்களுக்கு முன் ஆபிரகாமின் உக்கிராணக்காரனாயிருந்த எலியேசராக இருந்திருப்பானானால், இந்த அதிகாரத்தில் அவன் பெயர் குறிக்கப்படாதது ஆச்சரியமே. அவனுக்கு ஒரு பெயரைக் கொடுத்தால் பரிசுத்த ஆவியானவருக்குச் சரியான அடையாளமாக அவன் இருக்கமுடியாது. ஒரு மனிதனை அவனுடைய பெயர் மேன்மைப்படுத்துகிறது. பிதாவுக்கும் குமாரனுக்கும் மகிமையான நாமங்கள் உண்டு. ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கோ ஒன்றும் கிடையாது. அவர் தம்மைக் காட்டவோ அல்லது தம்மை ஒரு பொருட்டாக வெளிப்படுத்தவோ வராதபடி பிதாவானவர் குமாரனைப்பற்றிக் கொண்டிருக்கும் நோக்கங்களை நிறைவேற்றவே வந்தார்.

ரெபெக்காள் திருச்சபைக்கு அடையாளமாயிருக்கிறாள். பழைய ஏற்பாட்டு நிழல்களிலிருந்து இஸ்ரவேலுமல்ல, இஸ்ரவேலில் மீதியானவர்களுமல்ல, திருச்

சபையே கிறிஸ்துவின் மணவாட்டி என்றறிந்து கொள்ளுகிறோம். வெளிப்படுத்தல் 22: 16-ல் **சபைகளில்** சாட்சி அறிவிக்கப்படுகிறது. **அங்கே** (ஜெபாலயங்களிலல்ல சபைகளில்) மணவாட்டியின் சத்தம் கேட்கப்படுகிறது. "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்." ஆவியானவர் கற்பித்தபடி, அவரோடு சேர்ந்து மணவாட்டி பேசுகிறாள். ஆகையால் **ஆண்டவர் மறுபடியும் வருவதற்கு முன்பே** பரிசுத்த ஆவியானவர் மணவாட்டியிடம் இருக்கிறார். ஆனால் மகிமையான அந்த நாளுக்கு முன் இஸ்ரவேலிடம் பரிசுத்த ஆவியானவரில்லை. ஆகையால் மணவாட்டியென்பது பெந்தெகொஸ்தே நாளிலிருந்து பிதாவின் வீட்டில் சேர்க்கப்படும் வரை மீட்கப்படும் பெருங்கூட்டமாகிய திருச்சபையே.

## பரிசுத்தவானை வழி நடத்துகிறவர்

வருங்காலத்தின் மகிமையான காரியங்களைக் குறித்து எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் கையில் அளவுகோலைக்கொண்ட ஒரு மனிதன் அவனை வழி நடத்தினான். தானியேலுக்குத் தரிசனமான பரலோகத்தின் தூதனைப்போலில்லாமல் (தானியேல் 9: 21), அந்த மனிதன் பெயரில்லாதவனாக இருந்தான். அவன் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாயிருக்கிறான். அவர் தேவனுடைய ஆழமான சத்தியங்களை நமக்காக ஆராய்ந்து அவைகளைப்பற்றிய அறிவில் நம்மை நடத்துகிறார் (1 கொரிந்தியர் 2: 10).

தேவனுடைய பரிசுத்த காரியங்களில் பரிசுத்தவானை நடத்துகிறவர் அவரே.

கையில் சணற்கயிற்றையுடைய அந்த மனிதன் தீர்க்கதரிசியின் கண்களையும், காதுகளையும், மனத்தையும் கவர்ந்தான் (எசேக்கியேல் 40: 4). பரிசுத்த ஆவியானவரும் நம் முழு இருதயத்தையும் கவனத்தையும் விரும்புகிறார்.

அளவுகோலுடைய அந்த மனிதன் எசேக்கியேலை அளவு காணமுடியாத கிருபையின் ஆழங்களுக்கு நடத்திச் சென்றபின் (எசேக்கியேல் 47: 5) மறுபடியும் தான் ஆரம்பித்த அதே இடத்துக்கு அழைத்துச் செல்லுகிறான். அது கனி கொடுக்கும் இடமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரும் அவ்விதமே பெரிய அற்புதமான தேவனுக்கடுத்த காரியங்களில் நம்மை நடத்தியபின் நாம் கனி கொடுக்கும்படியாக மறுபடியும் இந்த உலகத்திலே நம்மை நடத்திச் செல்கிறார்.

## ஊழியர்களின் மேற்பார்வையாளர்

ரூத்தை மணந்துகொண்ட பெரிய ஆஸ்திக்காரனான போவாஸ் கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறான். வயல் வெளியில் அவனுடைய பிரதிநிதியாக "அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட வேலைக்காரன் ஒருவன் இருந்தான் (ரூத். 2: 5). வேலை செய்யும் வாலிபர்களை அவன் கண்காணித்தான். வயலின் அறுவடைக்கு அவன் பொறுப்பாளியாக இருந்தான். அந்த மனிதன் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாயிருக்கிறான்.

ரூத்தின் கடந்த கால சரித்திரமும், அவளுடைய விருப்பங்களும், வாஞ்சைகளும் எல்லாம் அவனுக்குத்

தெரிந்திருந்தன. அவனே அவளைப் போவாசுக்கு அறிமுகப்படுத்தினான்.

பரிசுத்த ஆவியானவரும் நம்முடைய விருப்பங்களையும் வாஞ்சைகளையுமெல்லாம் அறிவார். அவரே அவற்றையெல்லாம் உருவாக்கினவர். இவ்விதமாய் நம்மை நன்கறிந்த அவர் நம்மைக் கிறிஸ்துவுக்கு அறிமுகப்படுத்தி, பின் அவரோடு நமக்குள்ள ஐக்கியத்தை வளரச் செய்கிறார்.

அது மட்டுமல்ல, ஆத்தும அறுவடையில் ஆண்டவரின் பிரதிநிதியாகவுமிருக்கிறார். ஊழியர்களைக் கண்காணித்து, அவர்களை நடத்தி வல்லமைப்படுத்துகிறவராகவுமிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியர்களாகிய நாம் நம்மை வழி நடத்தும்படியாக அவரை எதிர் நோக்கவேண்டும். கர்த்தர் நம்மை நடத்துகிறார். ஆனால் இந்த நடத்துதல் பூலோகத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் மூலமாகக் கிடைக்கிறது.

## பாவியை வலியுறுத்துகிறவர்

லூக்கா 14: 16-23ல் கூறப்படும் பெரிய விருந்தைப் பற்றிய உவமையில் பரிசுத்த ஆவியானவர் இவ்விதம் விவரிக்கப்படுகிறார். மனிதரை வலியுறுத்தும் சக்தி அவருக்கே உண்டு. பிரசங்கிமார் மனிதருக்குப் **புத்தி சொல்லலாம்** (2 கொரிந்தியர் 5: 11). ஆனால் பரிசுத்த ஆவியானவரே அவர்களை **வலியுறுத்தக்கூடும்.**

## அத்தியாயம் 7

# ஆவியானவரின் சாட்சி

ஆவியானவரின் சாட்சி என்றால் என்ன? பரிசுத்த வேதத்தில் அதைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அநேக ஊக்கமுள்ள விசுவாசிகள் அதைச் சரியானபடி அறிந்து கொள்ளாமல் கருத்தோடும், கவலையோடும் அநேக ஆண்டுகளாய் அதை தேடியிருக்கிறார்கள். அதன் அர்த்தம் என்ன?

ஆவியானவரின் சாட்சி என்றால் என்னவென்று பார்ப்போம். எபிரேயர் 10: 15, 16, 17-ல் "பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார்; எப்படியெனில்: அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்த பின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்" என்று வாசிக்கிறோம்.

இதிலிருந்து இரண்டு காரியங்கள் தெளிவாகின்றன. முதலாவது, பரிசுத்த ஆவியானவரே ஒரு சாட்சியாயிருக்கிறாரென்று பார்க்கிறோம். இரண்டாவதாகப் பரிசுத்த ஆவியானவர் என்ன சாட்சி கொடுக்கிறாரென்று பார்க்கிறோம்.

சாதாரண நடைமுறை அனுபவத்தில் ஒரு சாட்சிக்கும், அவன் கொடுக்கும் சாட்சிக்குமுள்ள வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்ளலாம். ஒரு நீதி மன்றத்தில் சாட்சி சொல்லுவதற்கு நீ அழைக்கப்படுகிறுய் என்று வைத்துக்கொள்வோம். வழக்கு விசாரிக்கப்படும் நாள் வருகிறது, நீ மற்ற சாட்சிகளோடு உட்கார்ந்திருக்கிருய். சாட்சிக் கூண்டிற்கு அழைக்கப்பட்டவுடன், அங்கு வந்து நீ அறிந்ததைச் சொல்லுகிருய். நீ என்ன கூறினுயோ, அதுவே உன் சாட்சி. இந்த வேதப் பகுதியில் பரிசுத்த ஆவியானவரே சாட்சியாயிருக்கிருர். அவர் கூறும் சாட்சி எளிய, நடைமுறை பாஷையில் கூறப்பட்டிருக்கிறது.

## ஆவியானவரும் அவருடைய சாட்சியும்

பரிசுத்த ஆவியானவரே சாட்சியாயிருக்கிருரென்பதைச் சற்று நினைத்துப் பாருங்கள். காபிரியேலைவிட, எல்லாத் தூதர்களைவிடப் பெரியவர் அவர். சிருஷ்டி கர்த்தாவாகிய அவருடைய வாக்கு சிருஷ்டிகளாகிய அவர்களுடைய வாக்கைவிட மேலானது.

பரிசுத்த ஆவியானவரைவிடக் கௌரவமான சாட்சியிருக்கமுடியுமா? சத்திய ஆவியானவரைவிட நம்பத்தக்க சாட்சி யார்? அவர் சாட்சி கொடுத்தால் அவருடைய சாட்சி நிச்சயமாகச் சத்தியமானது தான். அவருடைய வார்த்தைகள் அசைக்கப்படக்கூடாதவை, அப்படியே ஏற்றுக்கொள்ளத்தக்கவை. ஆவியானவரின் சாட்சி நிச்சயமாகவே நம் விசுவாசத்திற்கு உறுதியான ஒரு அஸ்திபாரம். அதைவிட உறுதியான அஸ்திபாரம் பரலோகத்திலும் பூலோகத்திலும் வேறில்லை.

இன்னும் மேலே கவனிப்போம். ஆவியானவர் என்ன சாட்சி கொடுக்கிறார்? இக்கேள்விக்குப் பதிலளிக்கும் முன் எபிரேயர் 9-ம், 10-ம் அதிகாரங்கள் பாவப் பாரத்திலிருந்து மனச்சாட்சி விடுதலை பெறுவதைப் பற்றியே முக்கியமாகக் கூறுகின்றன என்பதை மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். யூதருடைய பலிபீடங்களில் கொடுக்கப்பட்ட பலிகளால் அது சாத்தியமாகவில்லை. அவைகளால் சிறிதளவு விடுதலை கிடைத்தாலும் அவற்றால் மனச்சாட்சியைச் சுத்திகரிக்கக்கூடவில்லை. ஆண்டுக்கு ஒரு முறை செலுத்தப்படும் பாவ நிவாரண பலிகூட மக்களின் பாவங்களை அவர்களுக்கு நினைப்பூட்டி, ஒரே பலியினால் நித்தியமான பாவ நிவாரணம் ஏற்படாது என்று காட்டுகிறது. (எபிரேயர் 10: 3).

ஆனால் எபிரேயருக்கு நிருபம் எழுதப்பட்ட சமயத்தில், பிரதானமான பலி செலுத்தப்பட்டுவிட்டது. விலைமதியா இரத்தம் சிந்தப்பட்டுவிட்டது. அதன் வல்லமை இன்னும் குறையவில்லை. யூதருடைய பலிகளைக் காட்டிலும் இது மேலான வல்லமையுள்ளதல்லவா? கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழ் அடைக்கலம் புகுந்தவர்களுக்குப் பாரமுள்ள மனச்சாட்சியும், நிச்சயமற்ற நிலையும் உண்டா? இருக்கவேயிருக்காது. "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார்" (எபிரேயர் 10: 14, 15). **என்றென்றைக்கும் பூரணப்படுத்தப்பட்டது!** எவ்வளவு அற்புதமான வார்த்தைகள் ! பாவப் பிரச்சினை மறுபடியும்

தோன்றுதபடி நித்தியமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. இது தான் இந்த அதிகாரத்தின் சாட்சி! இதை நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்.

இதற்குப் பிறகு தெளிவான வார்த்தைகளிலே திட்டவட்டமாகப் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த இன்னொரு சாட்சியை எரேமியா 31: 33, 34-ல் பார்க்கிறோம். அந்த வசனங்களின் இறுதி வார்த்தைகளைக் கவனிப்போம். தெய்வீகச் சாட்சியானவர் கொடுக்கும் சாட்சி யாவது என்ன? கவனியுங்கள்! இதைக் காட்டிலும் இனிமையான வார்த்தைகளைக் கேள்விப்பட்டதுண்டோ? "**அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்**" என்பதே அந்தச் சாட்சி. இதைக் காட்டிலும் தெளிவான சாட்சியை நாம் நீதி மன்றங்களில் கேட்க முடியுமா?

பரிசுத்த ஆவியானவரின் சாட்சி விளக்கக்கூடாத தல்ல, மர்மமானதுமல்ல. பேசப்பட்ட, எழுதப்பட்ட சாட்சி அது. இன்று ஒரு விதம், நாளை ஒருவிதம் என்று மாறக்கூடிய நிச்சயமற்ற சாட்சியல்ல அது. ஆவியான வரின் சாட்சி நிரந்தரமானது, மாறாதது. தேவனுடைய ஜீவனுள்ள புத்தகமாகிய பரிசுத்த வேதாகமத்தில் அது குறிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் **இனி நினையாதிருப்பா ரென்று அங்கே தானே** ஆவியானவர் சாட்சி கொடுக் கிறார்.

அவைகளை **இனி ஒருக்காலும்** நினையாதிருப்பார். ஒரு சமயம் சிறிய பாவங்களையும் பெரிய பாவங்களையும் எல்

லாம் நினைக்கப்பட்டன. உன் ஜீவியத்தில், குழந்தைப் பருவத்திலும், வாலிபப் பருவத்திலும், முதிர் வயதிலும் நீ செய்த எல்லாப் பாவங்களும் தேவனுக்கு முன்னால் அச்சமயம் கொண்டு வரப்பட்டன. எங்கே, எப் பொழுது என்று கேட்கிருயா? கல்வாரியில் அது சம்ப வித்தது. அங்கே அந்தப் பாவங்களுக்காக நீதிபரரான இரட்சகர் பாடுபட்டார். அங்கே தானே தேவன் அவற்றை நினைவுகூர்ந்து நியாயந் தீர்த்தார். ஆகையால் **இனி** அவை நினைக்கப்படமாட்டாவென்று பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிருர்.

பரிசுத்த வேதாகமம் எங்கெல்லாம் காணப்படு கிறதோ, அங்கு இரவிலும், பகலிலும், நிலத்திலும், நீரி லும், கோடையிலும், குளிரிலும், பள்ளத்தாக்கிலும், மலையிலும், அலுவல்களின் நடுவிலும், அமைதியின் வேளைகளிலும், வியாதியிலும், சுகத்திலும், இருண்ட நாட்களிலும், மகிழ்ச்சியின் நாட்களிலும் சந்தேகங் களின் நடுவிலும், விசுவாசத்தின்நடுவிலும் எல்லா வேளைகளிலும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் சாட்சியாவது தேவன் நம்முடைய பாவங் களையும் அக்கிரமங்களையும் **இனி ஒருக்காலும்** நினையாதிருப்பார் என்பதே.

எல்லா விசுவாசிகளுக்கும் உரியது இந்தச் சாட்சி. அவர்கள் வாலிபராஞலும் சரி, வயோதிபராஞலும் சரி, பலவீனமானவர்களாஞலும் சரி, பலமுள்ளவர்களா ஞலும் சரி, இந்தச் சாட்சி அவர்களுக்குரியது. இந்தச் சாட்சி மாறுவதில்லை. நேற்றும், இன்றும், என்றும் மாருதது அது.

ஆவியானவரின் இந்தச் சாட்சியைக் குறித்து நாம் செய்யவேண்டியதென்ன? இதை நாம் அசட்டை செய்வோமா, அல்லது ஏற்றுக்கொள்ளத் தயங்குவோமா? அப்படிச் செய்யாதபடி தேவன் நம்மைக் காப்பாராக. அது எவ்வளவோ பெரிய கிருபையை அவமதிப்பதாகும். நாம் இதைக் குறித்துச் செய்யவேண்டிய ஒரே ஒரு காரியம்: **அதை விசுவாசிக்கவேண்டும்.**

இந்தச் சாட்சியை விசுவாசிக்கும்பொழுது பாவமன்னிப்பைக் குறித்த பூரண சமாதானம் உண்டாகிறது. ஆவியானவரின் சாட்சியும், பாவமன்னிப்பைக் குறித்த சமாதானமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. அவற்றைப் பிரிக்கமுடியாது. ஒரு இருட்டறையின் ஜன்னல்களைத் திறக்கும்பொழுது வெளிச்சம் எவ்விதம் தன்னாலே உள்ளே வருகிறதோ, அவ்விதமே ஆவியானவரின் சாட்சியை நாம் பெறும்பொழுது பாவமன்னிப்பைக் குறித்த சமாதானமும் நமக்குக் கிடைக்கிறது.

## இருவகை சாட்சி

கல்வாரியில் ஒரே தரமாகச் செலுத்தப்பட்ட பலியினாலே நம் பாவங்கள் மனச்சாட்சியிலிருந்து நீக்கப்படுகின்றன. எபிரேயர் 10: 2-ல் "பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி" நமக்கில்லையென்று சொல்லப்படுகிறது. கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடைய பார்வையிலிருந்து அவற்றை நீக்குகிறது. தேவன் இனி அவற்றை ஒருக்காலும் நினையாதிருப்பாரென்று ஆவியானவர் கொடுக்கும் சாட்சியை நாம் விசுவாசிக்கும்பொழுது, மனச்சாட்சியிலிருந்து பாவ பாரம் நீக்கப்படுகிறது.

அநேகருடைய பாவங்கள் தேவனுடைய பார்வையி லிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களு டைய மனச்சாட்சியிலிருந்து அவை நீக்கப்படவில்லை. நான் கடன்பட்டிருந்து, கடனைக் கொடுக்க இயலாம லிருந்தால் என்னுடைய கடன்காரனைச் சந்திக்க விரும்ப மாட்டேன். யாரோ ஒருவர் அதைக் கொடுத்துத் தீர்த்து விட்டார், ஆனால் அவர் அதைக் குறித்து ஒரு வார்த்தை யும் என்னிடம் சொல்லவில்லையென்று வைத்துக் கொள் வோம். அந்தக் கடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டாலும், இன்னும் என் மனச்சாட்சியிலேயே பாரமாக அது இருக் கும். கடன் தீர்க்கப்பட்டால் மட்டும் போதாது. அது தீர்க்கப்பட்டதென்று நானும் அறியவேண்டும். கிறிஸ்து சிலுவையில் கொடுத்த அந்த ஒரே பலி என் கடனைத் தீர்த்தது. அது தீர்க்கப்பட்டதென்று எனக்கு அறிவிப் பது ஆவியானவரின் சாட்சியே. "அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாதிருப் பேன்." அற்புதமான சாட்சி! நீங்கள் ஒவ்வொருவரும் இதைப் பெற்றுக் கொள்வீர்களாக!

ரோமர் 8-ஆம் அதிகாரத்தில் ஆவியானவரின் சாட்சி யைக் குறித்து இன்னொரு விதமாய்க் கூறியிருக்கிறது. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோமர் 8: 16).

இங்கே கொடுக்கப்படும் சாட்சி எபிரேயர் 10: 17-ல் கொடுக்கப்பட்டதைப் போன்றதல்ல. வித்தியாசம் என்னவென்றால், எபிரேயர் 10-ல் ஆவியானவர் நமக்குச் சாட்சி கொடுக்கிறார். ரோமரில் ஆவியானவர் நம்

முடைய **ஆவியுடனேகூடச்** சாட்சி கொடுக்கிறார். முதலாவது இடத்தில், தேவன் நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி ஒருக்காலும் நினையாதிருப்பாரென்பதே ஆவியானவரின் சாட்சி. இரண்டாவது இடத்தில், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்பதே ஆவியானவர் நம்முடைய ஆவியுடனேகூடக் கொடுக்கும் சாட்சி. தேவன் பூரணமாகவும் இலவசமாகவும் நம்மை மன்னிப்பது மட்டுமல்ல, தாம் மன்னித்தவர்களைத் தம்முடைய பிள்ளைகளாகவுமாக்குகிறார்.

ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் 1: 5-ஐத் தவிர 5-ம் அதிகாரம் வரை வேறொரு இடத்திலும் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்படவில்லை. இதிலே ஒரு விசேஷ முக்கியத்துவமுண்டு. ஆவியானவரின் கிரியையையும் கிறிஸ்துவுடைய மீட்பின் கிரியையையும் நாம் கலந்துவிட தேவன் விரும்பவில்லை. ஆகையால் 8-ம் அதிகாரம் வரை ஆவியானவரின் முக்கியத்துவமும் கிரியையும் வெளிப்படுத்தப்படவில்லை.

## நித்திய ஜீவன்

ஆவியானவரின் சாட்சியைக் குறித்து நாம் கவனிக்கவேண்டிய இன்னுமொரு வேத பாகமுண்டு: I யோவான் 5: 6-13. இங்கே அச்சாட்சியைக் குறித்து இன்னும் சில சத்தியங்களைக் கவனிக்கிறோம். இங்கே நம்முடைய பாவங்களும் அக்கிரமங்களும் இனி நினைக்கப்படமாட்டாவென்றோ அல்லது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்றோ பரிசுத்த ஆவியானவர் சாட்சி பகரவில்லை. ஆனால், தேவன் நமக்கு **நித்திய**

**ஜீவனைத்** தந்தருளியிருக்கிறார், இந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே இங்கு அவர் தரும் சாட்சி.

"பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம்"—மூன்று சாட்சிகள், ஆனால் வாக்கு மூலம் ஒன்றே. நித்திய ஜீவன் நமக்குரியதென்று இம்மூன்றும் தேவனின் சார்பாகச் சாட்சி பகருகின்றன.

"தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்." இதன் அர்த்தமென்ன? பரிசுத்த ஆவியானவரே விசுவாசியின் சரீரத்தில் வாசம் பண்ணுகிறார் என்பது தான் அதன் அர்த்தம். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (I கொரிந்தியர் 6: 19). கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்பட்டு மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகிறான். இந்த ஆவியானவரே அவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்பதற்குச் சாட்சியாயும், வரப்போகிற மகிமையின் நாளில் அவன் சுதந்தரிக்கப் போவதற்கு அச்சாரமாகவும் இருக்கிறார் (எபேசியர் 1: 13).

இரத்தமும் தண்ணீரும் இயேசுவின் பிளவுண்ட விலாவிலிருந்து பாய்ந்தன. கிறிஸ்துவின் மரணம் நம்

முடைய பாவப் பரிகாரத்தை மட்டுமன்றி, நாம் பெற்றிருக்கும் ஆதாமின் ஜீவன் முடிவடைந்ததையும் குறிக்கிறது. முதலாம் ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்த ஜீவனனது தன்மையிலே தீயதாயிருக்கிறது. அந்த ஜீவனுலே நாம் தேவனுக்குப் பிரியமாய் ஜீவிக்கமுடியாது. ஆனுல் நமக்குப் பரலோக ஊற்ருகிய தேவ குமாரனிடமிருந்து நித்திய ஜீவன் பாய்ந்து வருகிறது. இந்த ஜீவனிலே இப்பொழுதே விசுவாசி பங்கு கொள்கிருன்.

இந்த முழுப் பகுதியிலும் அப்போஸ்தலன் கூறுவதைக் கவனியுங்கள். அநேக காரியங்களைக் குறித்து மனிதருடைய சாட்சியை நாம் உடனடியாக ஏற்றுக்கொள்ளுகிருேம். மனிதருடைய நோக்கம் சரியாயிருந்தாலும், மனித சாட்சி தவருயிருக்கக்கூடும். ஆனுல் தேவனிடத்தில் அப்படி இருக்கமுடியாது. ஆகையால் அவருடைய சாட்சி மனித சாட்சியைவிட ஒப்பற்றது, மகத்துவமுள்ளது. நாம் ஒருவருக்கொருவர் நம் வார்த்தைகளை நம்பும்பொழுது, தேவனுடைய வார்த்தையை நம்பவேண்டியது எவ்வளவு அவசியம்! அவரை விசுவாசியாமலிருப்பது, அவரைப் பொய்யராக்குவதாகும். இதைத்தான் இப்பகுதியில் 10-வது வசனத்தில் பார்க்கிருேம்.

விசுவாசிப்பவர்கள் எல்லோருக்கும் தேவன் கொடுக்கும் சாட்சி இதுதான். இந்தச் சாட்சியை நீ ஏற்றுக்கொள்ளுகிருயா? உனக்கு நித்திய ஜீவன் உண்டென்று உனக்குத் தெரியுமா? தெரியவில்லையானுல், ஏன் தெரிந்து கொள்ளக்கூடாது?

## அத்தியாயம் 8

## விசுவாசியின் சரீரம்

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய **சரீரங்களில்** வாசம் பண்ணுகிறுரென்பது நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான சத்தியம். நம்முடைய ஆத்துமாவிலோ, மனச்சாட்சியிலோ, சிந்தையிலோ அல்ல. சரீரத்தில் அவர் வாசம் பண்ணுகிருர். கொரிந்துவிலுள்ள விசுவாசிகளைப் பார்த்து, "உங்கள் **சரீரமானது** நீங்கள் தேவனுலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (I கொரிந்தியர் 6: 19) என்று அப்போஸ்தலன் கேட்கிருன்.

இதனுலே சரீரம் எவ்வளவு முக்கியமானதென்றறிகிறேம். ஆகையால், நாம் வாசிக்கிறவைகளைக் குறித்தும், கண்களினுல் பார்க்கிறவைகளைக் குறித்தும், நாவினுல் பேசுகிறவைகளைக் குறித்தும், கைகளினுல் செய்கிறவைகளைக் குறித்தும், காதுகளினுல் கேட்கிறவைகளைக் குறித்தும், நம் கால்கள் போகிற இடங்களைக் குறித்தும் நாம் எவ்வளவு கருத்துள்ளவர்களாயிருக்க வேண்டும்!

நாம் நமக்குச் சொந்தமானவர்களல்ல, கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள். நம்மைக் கிரயத்துக்குக் கொண்டவரின் பிரதிநிதியாகப் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்

பண்ணுகிருர். ஆகையால் நம் சரீரம் அவருடைய ஆலயமாயிருக்கிறது.

இதிலிருந்து இன்னொரு சத்தியமும் வெளிப்படு கிறது. நம்மில் வாசம் பண்ணுகிறவரே "இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவியானவர்" (ரோமர் 8: 11). நம் சரீரங்களில் அவர் வாசம் பண்ணு கிறது அச்சரீரங்களை அவர் எழுப்புவதற்கு அத்தாட்சி யாயிருக்கிறது. தேவன் அவராலே நம்மை உயிர்ப்பிப் பார். உயிர்ப்பிக்கப்பட்ட சரீரம் மறுபடியும் சாவுக்கும் அழிவுக்கும் உள்ளாகாது. நாம் எதிர்பார்க்கும் இந்தப் பெரிய மாறுதலுக்கு அத்தாட்சி பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணுவதேயாகும்.

அவர் நம்மில் வாசம் பண்ணுகிறதினுல் நம் சரீரங் கள் தேவன் மகிமைப்படுவதற்கும் கிறிஸ்து வெளிப்படு வதற்குமேற்ற பாத்திரங்களாக விளங்குகின்றன. ஆகை யால் அவை அழிவதற்கு தேவன் இடங்கொடார். ஏற் கனவே நம் ஆத்துமாக்களை அழிவுக்குரிய மரணத்தி லிருந்து உயிர்ப்பிக்க வல்லமையானது (எபேசியர் 2: 5) நம் சரீரங்களையும் தொடும். கிறிஸ்துவின் சாயலுள்ள உயிர்த்தெழுதலின் ஜீவனுக்குள்ளே நம் சரீரங்களும் பிரவேசிக்கும் (பிலிப்பியர் 3: 21).

இன்னுமொரு விசேஷ சத்தியமும் நம் கவனத்திற் குரியது. அதாவது, நம் இரட்சகர் தம் **உயிர்த்தெழு தலுக்குப் பின்னரும்** பரிசுத்த ஆவியினுலேயே அநேக காரியங்களைச் செய்தார். அப்போஸ்தலர் 1: 1-லிருந்து இதை அறிகிருேம். இதிலிருந்து, நாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளும் வாசம்

பண்ணுவார், அவருடைய வல்லமையினுலேயே நாமும் கிரியை செய்வோம் என்றறிகிறோம்.

**பின்வாங்கினவனும், மன்னிக்கப்படாத பாவமும்**

ஒருவன் பின்வாங்கிப்போய் பாவம் செய்து அவன் இருதயமும், மனச்சாட்சியும் எவ்வளவு தூரம் கடினப் பட்டிருந்தபொழுதும், பரிசுத்த ஆவியானவரை அசுத்த ஆவியென்றும் இயேசுவை அசுத்த ஆவி பிடித்த ஒரு துன்மார்க்கனென்றும் கூறின அந்த வேத பாரகருக்கு அவன் ஒப்பாயிருக்கமாட்டான். பின்வாங்கினவன் கிறிஸ்துவை அசுத்தத்தின் ஊற்றென்று தூஷிக்கமாட் டான். தானே குற்றவாளியென்று அவனுக்குத் தெரியு மாதலால் கிறிஸ்து பரிசுத்தமானவரென்று அவன் ஒப்புக் கொள்வான்.

தங்களுடைய பாவத்தின் மிகுதியினுல் தாங்கள் மன்னிக்கப்படாத பாவம் செய்துவிட்டதாகக் கருதுகிற வர்களிடம் நான் பின்வருமாறு கூறியிருக்கிறேன்:

"இரட்சிப்பு உனக்குக் கிடைக்குமென்று நான் உன்னை நம்பவைத்தால் நீ இரட்சிக்கப்பட விரும்பு வாயா?" என்று கேட்டவுடன் ஒவ்வொரு தடவையும், "ஆம், எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமாக அதை ஏற்றுக் கொள்வேன்!" என்று கூறியிருக்கிறுர்கள். உடனே, "நீ யாராலே இரட்சிக்கப் பட விரும்புகிருய்?" என்று நான் கேட்டிருக்கிறேன். அதற்கு "கிறிஸ்துவாலே இரட்சிக்கப்பட விரும்பு கிறேன். அவர் ஒருவர்தானே இரட்சகர்" என்று அவர் கள் பதில் சொன்னவுடன், "உன் ஆத்தும

இரட்சிப்புக்காக அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதனையா நம்புவாய்?" என்று கேட்டிருக்கிறேன்.

அநேக முறை இந்த வார்த்தைகள் நம்பிக்கையற்ற ஆத்துமாக்களுக்கு நம்பிக்கையளித்திருக்கின்றன. ஏனென்றால், பரிசுத்த தேவ குமாரனைக் குறித்து அவ்வளவு தூஷணமாக அவர்கள் நினைத்ததில்லை. ஆண்டவராகிய இயேசு யாருடைய வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தினாரோ அவரை அசுத்த ஆவியென்று கூறுவதே பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம்.

ஆகையால், உள்ளமுடைந்த, பின்வாங்கிப் போன விசுவாசியே, திடன்கொள். உன் பாவம் கேடானது தான். ஆனால் அது மன்னிக்கப்படாததல்ல. இரட்சகர் கிருபையுள்ளவர், உன் மனஸ்தாபத்தின் கூக்குரலுக்கு அவர் செவிகொடாமற் போகமாட்டார். அவர் பாதத்தண்டை முழங்காற்படியிட்டு உன் பாவத்தை அவரிடம் அறிக்கையிடு. அவர் உன் பின்வாங்குதலைக் குணமாக்கி, சோதனையை எதிர்த்து நீ செய்யும் போராட்டத்தில் உனக்கு உதவி செய்வார்.

## "பரிசுத்த ஆவியில் பங்கு பெற்றவர்கள்"

மேலே கூறிய விளக்கத்தினாலே எபிரேயர் 6-ல் உள்ள சிக்கலான பகுதி தெளிவாக இருக்காது. "பரிசுத்த ஆவியில் பங்கு பெற்றவர்கள்" நம்பிக்கையற்றவிதமாய் மறுதலித்துப் போகக்கூடுமா? "பரிசுத்த ஆவியில் பங்கு பெற்றவர்கள்" என்றால் உண்மையாகவே குணப்பட்டவர்களா?

அப்படியிருக்கவேண்டிய அவசியமில்லை. ஒருவன் "ஊழியக்காரனு" யிருக்கக்கூடும். யூதாசைப்போல அல்லது இன்னும் அநேகரைப்போல அநேக உபயோக மான காரியங்களைச் செய்திருக்கவும் கூடும். இருப் பினும், அவன் அவிசுவாசிகளைப்போல அழிந்து போகக் கூடும் (லூக்கா 12: 46). தங்களைக் கிறிஸ்தவர்களென்று கூறிக்கொண்டு, யூதாசைப்போல வெளிப் பிரகாரமாகப் பரிசுத்த ஆவியில் "பங்கு பெற்றவர்கள்" கொஞ்ச காலம் தண்டனையனுபவித்த பின் மோட்சத்திற்குச் செல்வார்களென்று கூறுவது பொய்யான போதனை யாகும். பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுத எந்த மனிதனும் உண்மைக் கிறிஸ்தவனே அல்லன். அவர்கள் "விசுவாசிக்கலாம்." ஆனுல் அது மேல்வாரியான விசு வாசமே. கிறிஸ்து கூறியதுபோல அவர்கள் "கொஞ்ச காலம் மாத்திரம் விசுவாசித்து" மறுதலித்துப் போகிறுர் கள் (லூக்கா 8: 13).

உண்மையான விசுவாசி பின்வாங்கலாம், ஆனுல் மறுதலித்துப் போகமாட்டான். எபிரேயர் 6: 4, 5-ல் கூறப்படுகிறவர்கள் உண்மையான விசுவாசிகளல்லர். அவர்களைக் குறித்துக் கூறப்பட்ட ஐந்து காரியங்களும் பெயரளவில்மட்டும் விசுவாசிக்கிற எவரையும் குறித்துக் கூறப்படலாம். ஒருவன் பெயரளவில் பரிசுத்த ஆவியில் பங்கு பெறுவது சாத்தியமே. அப்படியானுல் நாம் கிறிஸ்துவோடு நேரடியான தொடர்புகொண்டு, அவ ருடையவர்களென முத்திரையிடப்பட்டிருக்கிறோ மென்று நிச்சயப்படுத்திக் கொள்வது எவ்வளவு அவ சியம்!

## தேவனுடைய வாசஸ்தலம்

யாராவது ஒரு மனிதரை நாம் பார்த்து, "அவர் தோட்டத்திலேயே ஜீவிக்கிறார்" என்று சொல்லுகிறோமல்லவா? அவருக்கு அவருடைய தோட்டமே மிகவும் விசேஷமான இடம், தம்முடைய நேரத்தையெல்லாம் அங்கேயே செலவழிக்கிறார் என்பதே அதன் அர்த்தம்.

இன்னொருவர் தம்முடைய புத்தகங்களோடேயே ஜீவிக்கிறார். அதாவது தம்முடைய புத்தகங்களோடு எந்தவிதமான இடையூறுமில்லாமல் உட்கார்ந்திருப்பதே அவருக்கு மகிழ்ச்சியான அனுபவம்.

இன்னுமொருவர் தம் வியாபாரத்திலேயே ஜீவிக்கிறார். பண ஆசையல்ல, பணத்தைச் சம்பாதிக்கும் ஆசையே அவரை ஆட்கொள்ளுகிறது. இரவிலும் அதே அவருடைய கனவாகவிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமையிலேயே திங்கட்கிழமைக்குரிய திட்டங்களை வகுக்கிறார். விடுமுறை என்றால் அவருக்குப் பிரியமேயில்லை.

இவ்விதமே, சிலரைக் குறித்து அவன் "தேவனில் (நிலைத்திருக்கிறான்) ஜீவிக்கிறான்" (I யோவான் 4: 16) என்று நாம் கூறக்கூடும். தேவனே அவனுடைய முக்கிய வாஞ்சையாயிருக்கிறார். ஓய்வு நேரங்களிலெல்லாம் அவனுடைய ஆத்துமா அவரிடம் திரும்புகிறது. அவனுடைய உள்ளத்தின் வாசஸ்தலமே தேவனாயிருக்கிறார். அவன் "தேவனில் வாசம் பண்ணுகிறான்."

இவ்விதமாக எபேசியர் 2: 22-ல் கூறப்படும் சத்தியத்தை நாம் புரிந்துகொள்ளலாம். அவ்வசனத்திலிருந்தே நம் தலைப்பு எடுக்கப்பட்டிருக்கிறது. I யோவானில்

நாம் பார்த்ததற்கு எதிர்மறையான சத்தியம் இது. இங்கு தேவன் நம்மில் வாசம் பண்ணுகிருரென்று பார்க்கிருேம். தேவன் நம்மில் வாசம் பண்ணும்படியாகவும், அவருடைய ஆசாபாசங்கள் நம்மிலே தங்கும்படியாகவும், அவருக்கு நாம் ஒரு வாசஸ்தலமாக இருக்கும்படியாகவும் நாம் (புற ஜாதியாரான நாமும்) கூட்டிக் கட்டப்படுகிருேம்.

**ஒரே வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்ட அவருடைய மீட்கப்பட்ட மக்களில் தாமே தேவன் வாசம் பண்ணுகிருர். நம் வீடுகளில் நம் விருப்பப்படி நாம் நடக்கிறதுபோல, தம்முடைய ஆவியினுலே தேவன் வாசம் பண்ணுகிற தம்முடைய வாசஸ்தலத்தில் அவருக்குப் பிரியமானபடி அவர் கிரியை நடப்பிக்கிருர். இது எவ்வளவு அற்புதமான சத்தியம் !**

### ஆவியினுலே வல்லமையாய்ப் பலப்படுதல்

இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் ஆவிக்குரிய பலவீனத்தை உணர்ந்தவர்களாய் "அவருடைய ஆவியினுலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட" வேண்டுமென்று விரும்பலாம் (எபேசியர் 3: 16).

ஆனுல், "ஏன் அவ்விதம் விரும்புகிருய்?" என்று கேட்டால் எத்தனை விதமான பதில்கள் கிடைக்கும்! ஊழியத்தில் அதிகமான ஆவிக்குரிய பலம் கிடைக்கும்படியாக நான் பலப்படுத்தப்படவேண்டுமென்று சிலர் கூறலாம். துன்பங்களையும், சோதனைகளையும் தாங்கவும்,

கிறிஸ்துவுக்கென்று பாடுபடவும் நான் பலப்படுத்தப் படவேண்டுமென்று மற்றவர்கள் கூறலாம்.

இவையெல்லாம் நல்லவை தாம். ஆனால் பவுலுடைய ஜெபமாவது, எபேசியருடைய இருதயங்களில் கிறிஸ்து வாசமாயிருப்பது மட்டுமன்றி அவர்கள் **உணர்ந்து அறிந்து கொள்ளவும்** வேண்டுமென்று ஏறெக்கப்பட்ட ஜெபமாயிருந்தது.

தேவனுடைய யோசனைகள் அற்புதமானவை, எண்ணக்கூடாதவை. அவற்றைப் பாகுபடுத்தவும் நம்மால் கூடாது. ஒன்றோடொன்று இயைந்தவை அவை. தேவனுடைய சந்நிதியில் துதியிலும் ஜெபத்திலும் நாம் தரித்திருக்கும்பொழுதுகூட அவற்றை ஒழுங்குபடுத்தி எண்ணிப் பார்க்கவும் முடியாது (சங்கீதம் 40: 5). அவற்றின்தொகை எவ்வளவு அதிகம் (சங்கீதம் 139: 17)! ஆனால் அவையெல்லாம் கிறிஸ்துவில் அடங்கியிருக்கின்றன. தேவனுடைய யோசனைகள் வெளிப்படும்பொழுது அவை கட்டுக்கடங்காத வல்லமையுள்ளவையாயிருக்கின்றன. நாம் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாதபடி அவை நம்மைத் திகைக்கச் செய்கின்றன.

ஆனால் அவருடைய ஆவியினாலே வல்லமையாய்ப் பலப்படுத்தப்பட்ட பின் நாம் அவற்றை அறிந்து கொள்ளுகிறோம். தேவனுடைய யோசனைகளின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமுமான கிறிஸ்துவே நம் இருதயங்களில் வாசம் பண்ணுகிறார். இவ்விதமாக தேவனுடைய ஆலோசனைகளை உணர்ந்து கொள்ளவும் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ளவும் நம்மால் சாத்தியமாகிறது.

மகத்துவமான காரியங்கள் தரிசனத்தின் மூலமாகத் தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டபொழுது அவனுடைய "பெலனெல்லாம் போயிற்று" (தானியேல் 10: 8). அவன் கேட்ட வார்த்தைகளின் விளைவும் அதுவே (வசனம் 17). அப்பொழுது அவனுடன் பேசிய அந்த மகத்துவ புருஷன் அவனைத் தொட்டுத் திடப்படுத்தினான் (வசனம் 18). இப்படிப் பலப்படுத்தப்பட்டதினாலே, மேலும் அநேக வெளிப்படுத்தல்களைக் கேட்பதற்குத் தானியேல் ஆயத்தமாயிருந்தான். "என் ஆண்டவன் பேசுவாராக; என்னைத் திடப்படுத்தினீரே" என்றான் அவன் (வசனம் 19).

தேவனுடைய ஆவியினாலே நாமும் திடப்படுத்தப்படும்பொழுது அவ்விதமேயிருக்கும்.

## ஆவியின் கனி

நீதியின் கனிகள் இயேசு கிறிஸ்துவினாலே உண்டாகுமென்று நாம் வாசிக்கிறோம். அவரே அவைகளுக்குக் காரணர். அவர் பூலோகத்திலிருந்தபொழுது அவரிலே பூரணமாக அக்கனிகள் காணப்பட்டன. ஆனால் கிறிஸ்துவின் தன்மையை நம்மிலே உருவாக்குவது பரிசுத்த ஆவியானவரின் கிரியை. பிலிப்பியிலுள்ள கிறிஸ்தவர்கள் இந்த "நீதியின் கனி"களால் நிறைந்தவர்களாகவேண்டுமென்று, அதாவது, கிறிஸ்துவில் காணப்பட்டது அவர்களிலும் காணப்படவேண்டுமென்று அப்போஸ்தலன் ஜெபிக்கிறான்.

ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணுவதின் விளைவும், கிரியை செய்வதின் விளைவுமே ஆவியின் கனி.

கலாத்தியர் 5: 22, 23-ல் அது விவரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முந்தின வசனங்களில் விவரிக்கப்பட்ட மாம்சத்தின் கிரியைகள் அதற்கு நேர் எதிரிடையானவை. கலாத்தியருடைய விஷயத்தில், நியாயப்பிரமாணம், மாம்சப் பிரகாரமான கட்டுப்பாட்டையும், சீர்திருத்தத்தையும் போதித்தபடியால், இச்சையைப் பிறப்பித்தது. அதன் விளைவுகளே மாம்சத்தின் கிரியைகள். ஆனால் கிருபையோ நிபந்தனைகளற்றது. அதன் விளைவே "ஆவியின் கனி".

இதனாலே, நமக்குள்ளே ஆவியானவர் செய்யும் கிரியையையே நாம் நோக்கிக் கொண்டிருக்கவேண்டுமென்றர்த்தமல்ல. நம் நாட்டமும் சிந்தையும் கிறிஸ்து இருக்கும்படியான மேலான காரியங்களிலிருக்க வேண்டும். அவரை நோக்கிப்பார்த்து, அவரை நாம் நேசிக்கும் பொழுது கேவலமான மாம்சத்தின் கிரியைகளைக் **களைந்து போடவும்**, கிறிஸ்துவின் அழகான சாயலைத் **தரித்துக் கொள்ளவும்** நாம் பலப்படுத்தப்படுகிறோம்; (கொலோசெயர் 3: 2, 9, 12).

நாம் யாரை நாடுகிறோமோ அவருடைய சாயலை நம்மிலே உருவாக்கும்படியாகத் தேவ ஆவியானவர் கிரியை செய்கிறார். அவரை நம்புவதையல்ல, அவரை அறிந்து கொள்வதையே நாம் இங்குக் கவனிக்கிறோம். விசுவாசமல்ல, அன்பே இதில் சம்பந்தப்பட்டது. அவரில் நாம் அன்பு கூரும்பொழுது, அவரைப் போலாகிறோம். அப்பொழுது நம்முடைய ஜீவியங்களில் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்

குணம், விசுவாசம், சாந்தம், இச்சை யடக்கம் இவற்றை ஆவியானவர் உருவாக்குகிருர்.

தேவன் இப்படிப்பட்ட ஜீவியங்களை நோக்கி, "கிறிஸ்துவின் சாயல் காணப்படுகிறதினுல் இவை அழிந்து போகக்கூடாதபடி அருமையானவை. இவற்றை மகிமையில் சேர்த்துக் கொள்வேன்" என்று கூறுகிருர். இவ்விதமாக ஆவியானவரால் நம்மில் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவே, வரப்போகிற மகிமைக்கும் அச்சாரமாக இருக்கிருர். கொலோசெயர் 1: 27-ல் "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிருர்" என்பதன் அர்த்தம் இதுவல்லவா?

## அத்தியாயம் 9

# பெரிய காரியங்கள்

பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருக்கிறது! பாவத்தைத் தொடர்ந்து ஆவிக்குரிய மரணம் நேரிடுகிறது (ரோமர் 6: 11). இந்தக் காரியங்கள் ஒருவனை எவ்வளவு தூரம் கீழ் நோக்கி இழுத்துச் செல்லுகின்றன என்று நாம் பார்க்கும்பொழுது அது பயங்கரமாயிருக்கிறது. ரோமர் 7: 24-ல் அந்த நிர்ப்பந்தமான மனிதன் "இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று கூறுவது சரியே.

விடுதலையே கிடையாதா? இந்தப் பூமியில் நாமிருக்கும் வரை பாவப் பிரமாணத்திற்கு அடிமையாயிருக்க வேண்டுமா? இந்த உலகத்திலிருந்து நாம் சென்ற பிறகு விடுதலையாவோமென்பது நமக்குத் தெரியும். ஆனால் **தற்பொழுதே** விடுதலை கிடையாதா?

ரோமர் 8: 2-ல் காணப்படும் வெற்றி முழக்கத்தைக் கவனியுங்கள்: "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே". பவுலை விடுதலையாக்கினது எது?

வல்லமையுள்ள இன்னொரு பிரமாணமே அந்த விடுதலையை யளித்தது. ஒரு ஆகாய விமானம் தரையிலிருந்து மேலே எழும்புவதைக் கவனியுங்கள். கீழே இழுக்கும் பூமியின் ஆகர்ஷண சக்தியிலிருந்து அதை விடுதலையாக்

னது எது? விமானத்தைப் பறக்கவைக்கும் இன்ெெரு பிரமாணமே பூமியின் ஆகர்ஷண சக்தியின் பிரமாணத்திலிருந்து அதை விடுதலையாக்கிற்று.

ரோமர் 8-வது அதிகாரத்திலுள்ள வசனத்தை இந்த உதாரணத்தின் மூலமாக நாம் புரிந்து கொள்ளலாம். முதலாவது கிறிஸ்து இயேசுவைக் கவனிப்போம். உயிர்த்தெழுந்த மகிமையோடு பரலோகத்திலிருக்கும் அவருக்குக் கொடுக்கப்பட்ட நாமம் இது. "அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிருர்" (ரோமர் 6: 10). பரலோகத்தில் அவருக்குள்ள ஜீவியத்தையும், அந்த ஜீவியத்தின் சந்தோஷங்களையும், நடவடிக்கைகளையும், முயற்சிகளையும், அந்த ஜீவியத்துக்கே சூழ்நிலையான நித்திய அன்பையும் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமாக. பிறகு, அந்த ஜீவியத்தின் மூலாதாரமான ஆவியானவரைக் குறித்தும் சிந்திப்போமாக. பரலோக ஜீவியத்தின் சகல ஆசீர்வாதங்களையும் மெய் வல்லமையோடு இங்கு நமக்கருளிச் செய்கிறவர் அவரே. அந்த ஜீவியம் நம்மை ஆகர்ஷிக்கிறது. நம் ஆத்துமாக்கள் அதனுல் விரிவடைகின்றன. அந்த ஜீவியத்தின் சூழ்நிலையும், சந்தோஷங்களும், முயற்சிகளும் நம்முடையவையாகின்றன.

அப்படியாளுல், பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணம் எங்கே? மேலே கவனித்த காரியங்களிலிருந்து, நாம் அப்பிரமாணத்தினின்று விடுதலை பெற்றுவிட்டோமென்றறிந்துக்கொள்ளலாம்.மேலான பிரமாணமொன்று அப்பிரமாணத்தினின்று நம்மை விடுதலையாக்கிற்று. நம் தலையாகிய கிறிஸ்து பரலோகத்தில் ஜீவிப்பதும், நாம்

பரலோகத்தில் ஜீவிக்கப்போவதுமான அந்த அற்புத ஜீவியத்திற்குரிய ஆவியானவரே நம்மிலும் வாசம் பண்ணுகிறார் என்பதே அந்த மேலான பிரமாணம். இப்பொழுதே அந்த ஜீவியத்தை ஓரளவுக்கு நாம் அனுபவிப்பதற்கு ஆவியானவர் உதவி செய்கிறார். எவ்வளவுக்கு அந்த ஜீவியத்தை நாம் அனுபவிக்கிறோமோ, அவ்வளவுக்குப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று அவர் நம்மை விடுதலையாக்கியிருக்கிறார்.

## சிலுவையும் ஆவியானவரும்

I கொரிந்தியர் இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த அநேக காரியங்களை நாம் பார்க்கிறோம். ரோமர் 8-ம் அதிகாரத்தைத் தவிர அவரைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் அதிகமாகக் கூறப்படும் பகுதி இப்பகுதியே. இதற்குக் காரணமென்ன?

கொரிந்துவிலுள்ள சபையில் பலவிதமான தீமைகள் நுழைந்திருந்தன. அங்குள்ள கிறிஸ்தவர்களோ அதைக் குறித்துக் கவலையற்றவர்களாயிருந்தார்கள். பகிரங்கமான வேசித்தனத்தைக் குறித்து அவர்கள் "இறுமாப்படைந்திருந்தார்கள்" (I கொரிந்தியர் 5: 2). ஒருவேளை தங்கள் பரந்த மனப்பான்மையைக் குறித்து அவர்கள் பெருமைப்பட்டிருந்தார்கள் போலும்! அல்லது அவர்கள் அதை "அன்பு" என்று கருதியிருக்கலாம். ஆனால் அது பாவமான கவலையீனமே.

இதைத் திருத்துவதற்காகவே, 1-ம் 2-ம் அதிகாரங்களில் சிலுவையைக் குறித்தும், சிலுவை மரணத்தைக் குறித்தும் அப்போஸ்தலன் அநேக காரியங்களைக் குறிப்பிடுகிறான். 1: 13, 17, 18, 23; 2: 2, 8 பார்க்க. பாவத்

திற்கும், மாம்சத்திற்கும், உலகத்திற்கும் கதவை யடைத்து விடுகிறது சிலுவை. நம் இரட்சிப்பிற்காகச் சிலுவையில் இரட்சகர் மரித்தார். அது மட்டுமல்ல. நமக்கும் உலகத்திற்கும் நடுவில் மூடப்பட்ட கதவாக வும் நிற்கிறது சிலுவை. அந்தக் கதவிற்கு வெளியே நம் பாவங்களும், நம்மேல் விழவேண்டிய நியாயத் தீர்ப் பும், நம்முடைய துர்க்குணமும் இருக்கின்றன.

அதே சமயத்தில் திறந்த கதவொன்றும் காணப் படுகிறது. அந்தத் திறந்த கதவின் வழியாகத் தேவ னுடைய அற்புதமான காரியங்களுக்கு நம்மை நடத்து கிறவர் பரிசுத்த ஆவியானவரே.

1. மனித ஆவி மனிதனுக்கடுத்த காரியங்களை அறிவதுபோல தேவ ஆவியானவர் தேவனுக்கடுத்த காரி யங்களை அறிவார் (வசனம் 11).

2. தேவ ஆவியானவரின் காரியங்களை ஜென்ம சுபாவமுள்ள மனிதனால் ஏற்றுக் கொள்ளமுடியாது. இரசாயன சம்பந்தமான பாடங்களை ஒரு ஆடு அறிந்து கொள்ளமுடியுமா? விஞ்ஞானத்தின் கருவிகளையெல்லாம் மதியீனமாகக் கருதுமல்லவா அவ்வாடு? அதுபோலவே, ஆவிக்கடுத்த காரியங்களும் ஜென்ம சுபாவமுள்ள மனித னுக்கு மதியீனமானவையாகத் தோன்றும், (வசனம் 14).

3. நாம் பெற்றுக்கொண்ட ஆவியானவர் உலகத் தின் ஆவியல்லர், அவர் தேவ ஆவியானவர் (வசனம் 12). ஆகையால், நாம் இவ்வுலகத்தின் காரியங்களில் சந்தோஷ மாயிருக்க முடியாது. ஆனால் தேவனுடைய காரியங் களில் களிகூருகிறோம்.

4. அவர் (நமக்காக) தேவனுடைய ஆழமான சத்தியங்களை ஆராய்கிறார், (வசனம் 10).

5. தேவன் நமக்காகத் தாம் வைத்திருக்கும் காரியங்களைத் தம் ஆவியானவர் மூலமாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். (வசனம் 10).

6. தேவனுடைய காரியங்களை எடுத்துக் கூறுவதற்குத் தேவையான வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவரே நமக்கருளுகிறார், (வசனம் 13).

7. அவர் அருளும் வார்த்தைகளை அவரே வல்லமையினால் நிரப்புகிறார், (வசனம் 5). ஆகையால் சத்தியமானது "ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருக்கிறது."

இவ்விதமாக, நமக்கென்று வைக்கப்பட்டிருக்கும் மூடின கதவையும், திறந்த கதவையும் நாம் அறிந்து கொள்ள தேவன் தாமே உதவி செய்வாராக.

தேவ குமாரனுடைய வருகையானது இவ்வுலகத்தில் எவ்வளவு பெரிய மாறுதலை உண்டாக்கிற்று! எவ்வளவு பெரிய காரியங்களை அவர் நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்! பரிசுத்த ஆவியின் காலமாகிய இந்நாட்களுக்குரியவை அவை. அப்போஸ்தலருடைய நடபடிகளில் இக்காரியங்களை நாம் கவனிக்கிறோம்:

**(1) பெரிய ஒளி, அப்போஸ்தலர் 22: 6.**

இஸ்ரவேலுக்குக் கிடைத்த எல்லாவிதமான வெளிச்சத்தைவிட மகத்தானதும், இனி ஒருபோதும் கிடைக்கக் கூடாததுமான ஒளி நமக்காகப் பிரகாசிக்கிறது. கிறிஸ்து மறுபடியும் வந்து தம் இராஜ்யத்தை ஏற்படுத்தும்

பொழுது அவர் சூரியனைப்போல் பிரகாசிப்பார், (மல்கியா 4: 2). ஆனால் நமக்காக இப்பொழுது பிரகாசிக்கும் ஒளியோ சூரியனைக் காட்டிலும் பிரகாசமுள்ளது. பூமியில் உபத்திரவப்படும் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவில் ஒரு பகுதியாயிருக்கிறார்கள் (அவர் அவர்களைக் குறித்துப் பேசும்பொழுது, "என்னை" என்று குறிப்பிடுகிறார்) என்கிற அற்புதமான சத்தியத்தை அது வெளிப்படுத்துகிறது.

சகரியாவின் நாட்களில் காணப்பட்ட "சிறிய காரியங்களுக்கு" எதிரிடையாக இந்நாட்களில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெரிய காரியங்களில் இன்னும் சிலவற்றைக் கவனிப்போம்.

(2) **பெரிய துப்பட்டி,** அப்போஸ்தலர் 10: 11.

தேவனுடைய கிருபை உலகம் முழுவதற்குமுரியதென்பதை இது காட்டுகிறது. கடந்த காலங்களில், தேவ இரக்கத்தின் நதி அநேகமுறை கரை புரண்டோடியது. கானானியளாகிய ராகாபிற்கும், மோவாபியளாகிய ரூத்திற்கும், சீரியனாகிய நாகமானுக்கும், நினிவே நகரத்தின் சகல மக்களுக்கும் அது எட்டியது. ஆனால் இப்பொழுதோ, அது கரையற்ற நதியாய் எல்லா மனிதருக்கும் பாய்ந்து சென்று இஸ்ரவேலுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களைக் காட்டிலும் மேலான ஆசீர்வாதங்களை அருளுகிறது.

(3) **பெரிய ஜனக்கூட்டம்,** அப்போஸ்தலர் 14: 1.

கிருபை எல்லாருக்குமுரியது என்பது மட்டுமல்ல, அது எல்லாருக்கும் பலனுள்ளதாயுமிருக்கிறதென்பதும்

தெளிவாகிறது. பெந்தெகொஸ்து நாளில் பேதுருவின் விசேஷித்த பிரசங்கத்தின் மூலமாய் மூவாயிரம் பேர் சபையில் சேர்க்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு, அதைக் காட்டிலும் அதிகமான பேர் எப்பொழுதாவது குணப்பட்டிருக்கிறார்களா? ஒரு வேளை உலகம் முழுவதிலும் கணக்கெடுத்துப் பார்த்தால் கடந்த ஞாயிற்றுக் கிழமையில் மூவாயிரம் பேர் குணப்பட்டிருக்கலாமல்லவா? கிறிஸ்தவர்கள் எல்லோரையும் சேர்த்துக் கணக்கெடுத்துப் பார்த்தால் உண்மையாகவே அவர்கள் ஒரு பெரிய கூட்டத்தினர்தானென்று தெரிகிறது.

### (4) பெரிய வல்லமை, அப்போஸ்தலர் 4: 33.

இதுவும் பரிசுத்த ஆவியானவரின் காலத்திற்குரிய ஒரு விசேஷம். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1: 7). மின்சார வண்டி மேலே காணப்படும் கம்பிகளின் மூலமாக வரும் சக்தியினால் இயக்கப்படுகிறது. எல்லா மின்சார வண்டிகளையும் இயக்கும் ஒரே சக்தி அச்சக்தியே. அவ்விதமாகவே பூமியில் தேவனுடைய சாட்சியை விளங்கப்பண்ணும் வல்லமை ஒவ்வொரு தனிக் கிறிஸ்தவனையும் பலப்படுத்தும் வல்லமையே. அதுதான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை.

### (5) பெரிய கிருபை, அப். 4: 33.

நாம் ஜீவிக்கும் இக்காலம் கிருபையின் காலமென்றழைக்கப்படுவது சரியே. கிருபையும் வல்லமையும் ஒன்றோடொன்று இயைந்தவை. கிருபையில்லாவிடில்

வல்லமை தவருகப் பயன்படுத்தப்படலாம். பெரிய பாய்களையுடைய கனமான பாய்மரக் கப்பல்களுக்கு, தாழ்ந்த அடிப் பாகங்களுண்டு. இல்லாவிடில், அவை புரண்டுவிடக் கூடும். எவ்வளவுக் கதிகமாய்ப் பரிசுத்த ஆவியின் வல்லமை நம்முடைய சாட்சியிலும், ஜீவியத்திலும், ஊழியத்திலும் காணப்படுகிறதோ அவ்வளவுக் கதிகமாய்த் தேவனுடைய பெரிய கிருபை நமக்கவசியம். அதுதான் "பற்பல" கிருபை (1 பேதுரு 4: 10). அதாவது, அநேக விதங்களில் நமக்குப் பயன்படும் கிருபை. அது **சகல** கிருபைக்குமுரிய தேவனிடமிருந்து நமக்குக் கிடைக்கிறது (1 பேதுரு 5: 10). நிச்சயமாக அவரிடம் எதற்கும் குறைவில்லை.

## சுதந்தரவாளியும், சாவியும்

நியூயார்க் பட்டணத்தில், ஒரு கோடீஸ்வரனின் மகள் தன் திருமண சமயத்தில் தன் தந்தையிடமிருந்து ஒரு சாவியைத் திருமணப் பரிசாகப் பெற்ருள். வந்திருந்த விருந்தாளிகள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனுல், மணமகளோ புன்முறுவலுடன் அச்சாவியைப் பெற்றுக் கொண்டாள். அதன் மதிப்பை அவள் அறிவாள். அழகாக ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பெரிய வீடு அவளுக்கு அளிக்கப்பட்டது. அதற்கு அடையாளமே அச்சாவி. அது மட்டுமல்ல, அந்த ஈவை அவள் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதும் அச்சாவியே.

அவ்விதமாகவே, பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய பெரிய ஈவுகளுக்குச் சாவியாயிருக்கிருர். அவர் நம்மில் வாசம் பண்ணுவதே, அவையெல்லாம் நமக்குச் சொந்தமென்பதற்கு அச்சாரமாயிருக்கிறது. அவற்றை

நாம் சுதந்தரிப்பதற்கும், அனுபவிப்பதற்கும், உதவும் வல்லமையாகவும் அவரேயிருக்கிறார். இந்த ஆசீர்வாதங் களெல்லாம் நமக்குரியவையென்று பரிசுத்த வேதமே சாட்சி பகருகிறது. அச்சாட்சியை விசுவாசத்தினால் நாம் ஏற்றுக்கொண்டு நம் சுதந்தரங்களைக் குறித்த நிச்ச யத்தைப் பெற்றுக் கொள்ளுகிறோம்.

இக்காரியங்களினால், நாம் உலகத்துக்குரியவர்க ளல்லவென்பது நிச்சயமாகிறது. ஆகையால் உலகம் நம்மைப் பகைக்கிறது. இதன் விளைவாக நாம் ஏற் கனவே கவனித்த ஐந்து பெரிய காரியங்களோடு அப் போஸ்தலர் நடபடிகளில் கூறப்படும் இன்னுமிரண்டு பெரிய காரியங்களையும் பார்க்கிறோம்.

(6) **பெரிய உபத்திரவம்**, அப். 8: 1. இதற்குமுன் உபத்திரவம் இல்லாமலில்லை. எலியா யேசபேலினால் உபத்திரவப்படுத்தப்பட்டான்; எரேமியா குழியில் தள் ளப்பட்டான். ஆனால் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட உபத் திரவமோ அவையெல்லாவற்றிலும் அதிகக் கடுமை யானது. ரோம ஆட்சியில் ஆயிரக்கணக்கான கிறிஸ் தவர்கள் மூர்க்கத்தனமாகக் கொல்லப்பட்டார்கள். இன் னும் அநேக பரிசுத்தவான்கள் மற்ற ஆட்சியாளராலும் உபத்திரவப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சீனாவிலும், மட காஸ்கரிலும், அர்மேனியாவிலும், ரஷ்யாவிலும் நடந்த வற்றைக் கவனியுங்கள். நம் நாட்களிலும் உபத்திரவம் பெருகியிருக்கிறது.

(7) **பெரிய சந்தோஷம்**, அப். 8: 8; 15: 3.

உபத்திரவத்தின் நடுவிலும், சாவிலும் கிறிஸ்தவர் கள் கொண்டிருக்கும் சந்தோஷத்திற்கு வேறு எந்த

சந்தோஷம் உண்டாகமுடியும்? அது இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தின் கீழ்கரையில் அனுபவித்ததைப் போன்ற விடுதலையின் சந்தோஷமல்ல. தேவ அன்பில் பங்கு கொள்வதிலும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குத் தாங்கள் சொந்தமென்று அறிந்து கொள்வதிலும் ஏற்படும் சந்தோஷமே.

### பரிசுத்த ஆவியானவரும் உலகமும்

உலகத்தைச் சேர்ந்தவனெவனும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு வேளை அவன் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிக்கலாம். ஆனால் விசுவாசிகளுக்கேயன்றி வேறு யாருக்கும் தேவன் தம் ஆவியானவரை அருளமாட்டார், "உலகம் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது" (யோவான் 14: 17) என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

உலகம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவரோ உலகத்திலிருந்தார், அதற்குச் சாட்சி கொடுத்தார், அதிலிருந்து மனிதரை இரட்சித்தார். அவ்விதமாகவே, பரிசுத்த ஆவியானவரும் உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் உலகத்திலிருக்கிறார். அவருடைய பிரசன்னத்தினால் அவர் சில காரியங்களைச் செய்கிறார்.

(1) உலகம் கிறிஸ்துவை விசுவாசியாததினால், உலகத்தைப் பாவத்தைக் குறித்துக் கண்டித்துணர்த்துகிறார் அவர் (யோவான் 16: 8, 9). பாவிகளுடைய ஆத்துமாக்களில் ஆவியானவர் பாவ உணர்வை உண்டாக்குவதை இது குறிக்கவில்லை. ஆவியானவர் அதைச் செய்

வது உண்மை தான். ஆனால் இப்பகுதியின் அர்த்தம் வேறு. கிறிஸ்துவை உலகம் தள்ளிவிட்டபடியால் அவர் உலகத்தை விட்டுப் போய்விட்டார் என்பதற்குப் பரிசுத்த ஆவியானவரின் வருகை சான்றாக இருக்கிறதென்பதே இப்பகுதியின் அர்த்தம்.

(௨) நீதியைக் குறித்தும் அவர் உலகத்தைக் கண்டித்துணர்த்துகிறார். கிறிஸ்து உலகத்தில் அநியாயமாய் நடத்தப்பட்டார். ஆனால், "..............அவர் தன் இரட்சிப்பின் தேவனால் நீதியைப் பெறுவார்" என்று சங்கீதம் 24: 5-ல் கூறப்பட்டிருக்கிறது. பரலோகத்தில் அவர் நியாயமாய் நடத்தப்பட்டார். உரிமைப்படி அவருக்குரிய இடம் அங்கு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் உலகத்தில் வந்திருக்கிறது இதற்கு அத்தாட்சியாயிருக்கிறது.

(௩) உலகத்தின் அதிபதி (சாத்தான்) தள்ளப்பட்டபடியால், உலகத்தை நியாயத் தீர்ப்பைக் குறித்தும் அவர் கண்டித்துணர்த்துகிறார். இவ்வுலகத்தின் உண்மையான உரிமையாளர் கிறிஸ்துவே. எல்லாவற்றிற்கும் அவரே சுதந்தரவாளி, கிறிஸ்துவின் பிரதிநிதியாக இவ்வுலகத்தில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறபடியால், உலகத்தின் அதிபதி நியாயந் தீர்க்கப்பட்டானென்றும், அவனுக்கு அடி பணிந்தவர்களும் அவனுடைய நியாயத் தீர்ப்பில் பங்கு பெறுவார்களென்றும் நிரூபிக்கிறார்.

### வெற்றி பெறும் கட்சி

இங்கிலாந்தில் சர்வ கலாசாலைகளின் வருடாந்திரப் படகுப் பந்தயம் நடக்கும் நாள் அது. ஒவ்வொரு நகரத்திலும் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் நீல நிறப் பூக்களை அணிந்தவர்களாய்த் தெருக்களில் எங்கும்

காணப்பட்டார்கள். கருமையான நீல நிறம் ஆக்ஸ் போர்டு சர்வ கலாசாலைக்குரியது. வெளிறிய நீல நிறம் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலைக்குரியது. சிறிது நேரத்திற் குப் பின் மெதுவாகச் செய்தி எட்டியது. கேம்பிரிட்ஜ் வெற்றி பெற்றுவிட்டது. உடனே வெளிறிய நீல நிறத்தை அணிந்திருந்தவர்கள் எவ்வளவு களிப்புடன் ஆரவாரம் செய்தார்கள்! தெருக்களிலெல்லாம் அவர் களுடைய ஆரவாரமே கேட்டது.

மறுபடியும், ஒரு யுத்தத்தைக் கவனிப்போம். யுத்தத் தில் போரிட்ட ஒரு நாட்டிற்கு அதன் படைகள் வெற்றி பெற்றனவென்று செய்தி வருகிறது. உடனே கொடிகள் ஏற்றப்படுகின்றன; எங்கும் மணியோசை கேட்கிறது; மக்கள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். எங்கும் மகிழ்ச்சியும், வெற்றியின் அறிகுறிகளும் காணப்படு கின்றன.

இதைப் போன்ற ஒரு காட்சி "தேவனுடைய ஆவி யாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கி யிருக்கிறார்" (1 பேதுரு 4: 14) என்று விவரிக்கப்பட் டிருக்கிறது. ஆனால், அதில் இரு வித்தியாசங்கள் உண்டு.

முதலாவது, வெற்றியின் சின்னத்தை நாமே அணிந்து கொள்வதில்லை, நமக்குள் வாசம் பண்ணும் பரி சுத்த ஆவியானவர் அதை அணிந்து கொள்கிறார். அவரே அந்த வெற்றியில் களிகூருகிறார். மகிமையின் ஆவியாக அவர் நம்மில் தங்கியிருப்பதால், நாமும் களிகூருகிறோம். மகிழ்ச்சியை நமக்குள் உண்டு பண்ணி, வெற்றியில் நம் மைப் பங்குபெறச் செய்கிறவர் அவரே.

இரண்டாவது, இறுதி வெற்றி ஏற்படும் முன்பே, இவ்விதமாக மகிமையின் ஆவியானவர் நம்மில் தங்கியிருக்கிறார். நாம் இன்னும் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெற்றவர்களாகவும், அவருடைய நாமத்தினிமித்தம் நிந்தைக்குரியவர்களாகவுமேயிருக்கிறோம். ஆனாலும், நாம் வெற்றி பெறும் கட்சியைச் சேர்ந்தவர்களென்று அறிந்து அதன்படி நடக்கிறோம். போரில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் கட்சி வெற்றிபெற்றால் எங்ஙனம் களிகூருவார்களோ, அங்ஙனம் நம்மைக் களிகூரச் செய்கிறார் மகிமையின் ஆவியானவர். கல்வாரியில் கிறிஸ்துவின் கால்களின்கீழ் சாத்தானை நசுக்கினவர், சீக்கிரத்தில் **நம் கால்களின்கீழ்** அவனை நசுக்குவார் என்ற நிச்சயம் நமக்குண்டு (ரோமர் 16: 20). அந்த மகிமையான முடிவை நாம் எதிர்நோக்கியிருக்கிறோம். ஆத்துமாக்களில் கீதமும், உதடுகளில் துதியுமுள்ளவர்களாய் வரப்போகும் மகிமையின் நிச்சயத்தில் நாம் களிகூருகிறோம்.

சிறையில் போடப்பட்டாலும், மகிழ்ச்சியோடு நாம் தேவனை நோக்கிப் பாடலாம் (அப். 16: 25). சாவின் நடுவிலும் நாம் பாடலாம், ஏனென்றால், மகிமையின் ஆவியானவர் ஏற்கனவே நம்மில் தங்கியிருக்கிறார். மகிமையின் சுதந்தரவாளிகளாக நாம் வாழ்வுக்கடுத்த காரியங்களில் பங்கு பெறுகிறோம்.

## அத்தியாயம் 10

# ஆசீர்வாதம்

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்." (2 கொரிந்தியர் 13: 14).

எவ்வளவு அறிமுகமான **வார்த்தைகள்** இவை! இதனாலேயே, இவற்றின் முக்கியத்துவத்தைச் சில வேளைகளில் நாம் மறந்துவிடுகிறோம். வெறும் மந்திரமாகவே சிலர் அதை உச்சரிக்கிறார்கள். இன்னும் அநேகர் அதைக் குறித்துச் சிந்திக்காமலே அதைக் கேட்கிறார்கள்.

இது மிகவும் பரிதபிக்கக்கூடிய விஷயம். ஏனென்றால் இந்த வார்த்தைகள் மிகவும் விசேஷமான அர்த்தமுள்ளவை. திரியேகத் தெய்வத்துவத்தின் மூன்று ஆட்களையும் குறிக்கும் சில வசனங்களில் இது ஒன்றாகும். பிதாவோடும் குமாரனோடும் சமமாகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்படுகிறார். ஒரே ஆளில் மூன்று தேவர்களல்ல. ஒரு தேவன் மூன்று ஆட்களில் வாசம் பண்ணுகிறார்.

**"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை"**யானது அவர் நமக்காகத் தரித்திரரானதால் கடந்த காலத்தில் வெளிப்பட்டது (2 கொரிந்தியர் 8: 9). ஆனால் அது கடந்த காலத்துக்குரிய வரலாறாக மட்டும் கருதப்படவில்லை. இன்றைக்குமுரிய சத்தியமாயிருக்கிறது. அது

நம்மோடிருந்து, நாம் எங்குச் சென்றாலும் நமக்குத் தத்ரூபமான சத்தியமாயிருக்கவேண்டுமென்பதே இந்த ஆசீர்வாத ஜெபத்தின் பொருள்.

“தேவனுடைய அன்பு” இதுவும் தேவ குமாரனாக அருளப்பட்டதினாலே கடந்த காலத்தில் வெளிப்பட்டது. “தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது” (I யோவான் 4: 9). ஆனால் இது தற்காலத்துக்குமுரிய சத்தியமே. நித்தியமாக நம்மைத் தழுவியிருக்கும் அன்பு இது. ஒன்றும் இதிலிருந்து நம்மைப் பிரிக்கமுடியாது.

“பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம்” முன்கூறிய மற்ற வார்த்தைகளைப்போல் இதன் அர்த்தம் அவ்வளவு தெளிவாயில்லை. பிதாவோடும் குமாரனோடும் நமக்குள்ள ஐக்கியத்தை இது குறிக்கிறது. இந்த ஐக்கியம் முதலில் அப்போஸ்தலர்களுக்குரியதாயிருந்தது. ஆனால் அவர்களுடைய ஊழியத்தின் மூலமாய் நாமும் அதில் பங்கு பெறுகிறோம் (I யோவான் 1: 3). மேலும், நாம் ஒருவரோடொருவர் கொள்ளும் ஐக்கியத்தையும் இது குறிக்கிறது. பிரிவினை யுண்டாக்கும் எல்லாவற்றையும், எல்லாப் பொறாமையையும், சந்தேகத்தையும், புறங்கூறுதலையும், அன்பற்ற நினைவுகளையும், தன்னயத்தையும் தள்ளி விடுவதை இது குறிக்கிறது.

“பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம்” என்பதில் அடங்கியிருப்பது இதுவே. கிறிஸ்தவர்கள் நடுவில்

காணப்படும் பிரிவினைகளும், பேதங்களும் மாம்சத்தின் கிரியைகளாகும் (கலாத்தியர் 5: 20). ஆனால் ஆவியின் கனியோ, "அன்பு, சந்தோஷம், சமாதானம்" (வசனம் 22). சமாதானத்தின் தேவனான தேவ ஆவியானவர் தம்முடைய பரிசுத்தவான்களிடையே ஒற்றுமையும், அன்பும் ஒருவரையொருவர் தாங்கும் பொறுமையும் காணப்படும்படியாகக் கிரியை செய்கிறார். "பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம் உங்களனைவரோடுமிருப்பதாக" என்று நாம் ஜெபிக்கும்பொழுது, பிரிவினையும், சண்டையும் உண்டாக்கும்படியாகச் சாத்தானுக்கு இடங்கொடாமல், ஒற்றுமையிலும், பரிசுத்த ஆவியானவர் மூலம் உண்டாகும் ஐக்கியத்திலும் நிலைத்திருக்க வேண்டுமென்றே நாம் ஜெபிக்கிறோம்.

BOOKS THAT RADIATE LIGHT

UNDERSTANDING THE

# HOLY SPIRIT

BY

HAROLD P. BARKER

விலை : ரூ. 1/-